# பொறுப்பார்ந்த மீன்வள

# நடத்தை விதித் தொகுப்பு

ஐக்கிய
நாடுகள்
சபையின்
உணவு
மற்றும்
வேளாண்மை
அமைப்பு

Code of Conduct for Responsible Fisheries (Translated into Tamil, 1999)

<<

# பொறுப்பார்ந்த

# மீன்வள

# நடத்தை விதித் தொகுப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

ரோம், 1995

<<

மறு பதிப்பு - 1996

*விவர அட்டவணைக் குறிப்பு :*

**உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு,**

பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பு,

ரோம், உ.வே.அ., 1995, 41 பக்கங்கள்.

இவ்வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட பெயர்க் குறிப்புகளும் அளிக்கப்பட்ட தகவல்களும் ஒரு நாட்டின் சட்டமுறையான தகுநிலை, பெருநிலப் பகுதி, நகரம் அல்லது பகுதியினை பற்றியோ, பிறநாட்டுடனான அந்நாட்டின் எல்லைக்கோடு அல்லது எல்லையை பற்றியோ ஐக்கியநாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் சார்பாக குறிப்பாக எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை.

அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தார்க்கே. இவ்வெளியீட்டின் எவ்வித பதிப்பும் பதிப்புரிமையாளரின் முன்அனுமதியின்றி மறு அச்சிடவோ, மீண்டும் அச்சிட, பாதுகாத்து வைக்கவோ அல்லது மின்னணுவியல், இயந்திரவியல், நிழற்பட அச்சு ஆகியவற்றை எவ்வகையிலும் அல்லது வேறுவகையிலும் ஊடனுப்புதலோ கூடாது. மேற்கண்டவாறான செய்முறைக்கு, அச்சிடப்பட வேண்டியதன் நோக்கம், மறு அச்சின் அளவு ஆகியவற்றைக் குறிப்பிட்டு ஒரு விவர அறிக்கையுடன், விண்ணப்பம் ஒன்றினை, இயக்குநர், வெளியீட்டுகள் பிரிவு, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, வியாலே, டெர்மே டி, காரகல்லா 01100, ரோம், இத்தாலி என முகவரியிட்டு ஒரு விண்ணப்பத்தினை அனுப்ப வேண்டும்.

© FAO 1995


உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் அனுமதியுடன்
தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையால் மொழிபெயர்க்கப்பட்டது.

<<

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| அணிந்துரை | | | v |
| முகவுரை | | | vii |
| முன்னுரை | | | 1 |
| விதிப்பிரிவு | 1 | விதித்தொகுப்பின் தன்மையும் வாய்ப்பும் | 1 |
| விதிப்பிரிவு | 2 | விதித்தொகுப்பின் குறிக்கோள்கள் | 2 |
| விதிப்பிரிவு | 3 | பன்னாட்டுச் சட்ட அளவிலான தொடர்புமுறை | 3 |
| விதிப்பிரிவு | 4 | செயலாக்கம், மேற்பார்வை மற்றும் புதுப்பித்தல் | 4 |
| விதிப்பிரிவு | 5 | வளரும் நாடுகளின் சிறப்புத் தேவைகள் | 5 |
| விதிப்பிரிவு | 6 | பொதுவான கொள்கைகள் | 5 |
| விதிப்பிரிவு | 7 | மீன்வள மேலாண்மை | 10 |
| விதிப்பிரிவு | 8 | மீன்பிடிப்பு முறைகள் | 21 |
| விதிப்பிரிவு | 9 | நீர்வாழ் உயிரின வளர்ப்பை மேம்படுத்துதல் | 30 |
| விதிப்பிரிவு | 10 | கடலோர மேலாண்மையினுள் ஒருங்கிணைந்த மீன்வளம் | 34 |
| விதிப்பிரிவு | 11 | பிடித்த மீனைக் கையாளும் முறைகளும், வணிகமும் | 37 |
| விதிப்பிரிவு | 12 | மீன்வள ஆராய்ச்சி | 42 |
| *இணைப்பு* | *1* | விதித்தொகுப்பின் தோற்றுவாய் மற்றும் விரிவாக்கப் பின்னணி | 47 |
| *இணைப்பு* | *2* | தீர்மானம் | 55 |


<<



**தலைமைச் செயலகம்**
சென்னை - 600 009.

நாள் : 19.12.1998

# அணிந்துரை

ரோம் நகரிலுள்ள உணவு மற்றும் வேளாண்மை அமைப்பினால் (Food and Agriculture Organization of the United Nations) வரையறுக்கப்பட்ட பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பினைத் தமிழ்நாடு மீன்வளத்துறையினர் தமிழில் மொழிபெயர்த்திருப்பது மகிழ்ச்சி தருகின்றது.

கடல்வள ஆதாரங்கள் அளவற்றதன்று; மிகையான மீன்பிடிப்பு, மீன் இருப்பினையும் மீன் தொகுதி அளவையும் குறைத்துவிடும். இதனால் நாளடைவில் குறைந்த அளவு மீன் கிடைக்கப்பெற்று மீனவர்களுக்கு வருவாய் குறையும் நிலை ஏற்பட வாய்ப்பாகிறது. அண்மைக்காலத்தில் தானாகவே இனப்பெருக்கமாகும் மீன்களைப் பிடிப்பதில் ஏற்பட்டிருக்கின்ற மிகப்பெரிய வளர்ச்சியானது, "மீன்வள ஆதாரங்கள் புதுப்பிக்கக்கூடியவை என்றாலும் முடிவற்றதன்று", என்ற ஒரு விழிப்புணர்வை நாடுகளிடையே உருவாக்கியுள்ளது. கூட்டுப்பொறுப்பு ஒன்றே ஒரு நல்ல தீர்வை அளிக்கும் என்று உலக நாடுகள் உணர்ந்தன. தனியுரிமையுள்ள பொருளாதார மண்டல அறிவிப்பினைக் (Exclusive Economic Zone) கருத்தில் கொண்டு, கடல் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகளின் மாநாடு சிறந்த மீன்வள ஆதாரங்களின் மேலாண்மைக்காக ஒரு சட்ட முறையிலான கட்டமைப்பை அமைத்தது.

இவ்விதித் தொகுப்பு உறுப்பு நாடுகளுக்குரிய பொறுப்புகளையும், மீன்வளப் பாதுகாப்பு, கட்டுப்பாடுகள், சிறந்த மேலாண்மை முறைகள் ஆகியவற்றில் எடுக்க

வேண்டிய நடவடிக்கைகளையும் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு என்ற அதிகார உரிமையுள்ள குழுமம், உறுப்பு நாடுகள் இந்த விதித் தொகுப்பை திறமையாகச் செயல் முறைப்படுத்துவதில் உதவி புரிகிறது. முன்னணிக் கடல் மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு இவ்விதித் தொகுப்பினை முழுவதுமாகப் பின்பற்றி மீன்வளப் பாதுகாப்பு, திறமையான மேலாண்மை நடைமுறை ஆகியவற்றின் மூலம் மீன்வளத்தினை நீண்டகாலத்திற்கு நிலைநிறுத்திடத்தக்க உறுதியான சூழலை உருவாக்கிடும் எனப் பெரிதும் நம்புகிறேன்.

அன்புள்ள,

**மு. கருணாநிதி**
முதலமைச்சர்

<<

# முகவுரை

பண்டைய காலந்தொட்டு, "மீன்பிடிப்பு" மனித இனத்துக்குப் பெருமளவு உணவளித்து இதில் ஈடுபட்டவர்க்குப் பொருளாதாரப் பயன்களையும் வேலை வாய்ப்புகளையும் நல்கி வந்துள்ளது. நீர் வாழ் உயிரின வள ஆதாரங்கள் இயற்கையின் ஓர் அளவற்ற நன்கொடையாகக் கருதப்பட்டன. ஆயினும், இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஏற்பட்ட அறிவுத்திறன் மற்றும் விரைவான மீன்வள வளர்ச்சியினால் இப்பழைய கோட்பாடுகள் மறைந்து, நீர் வாழ் உயிரின ஆதாரங்கள் புதுப்பிக்கத்தக்கவை என்றாலும் நிச்சயமற்றவை என்ற நிலை ஏற்பட்டது. மேலும் அவற்றின் பங்களிப்பு வளரும் மக்கட் தொகைக்கு ஏற்ப சத்துள்ள உணவு மற்றும் சமூக பொருளாதார நலன்களை வழங்குவது நிலைநிறுத்தப்பட வேண்டுமெனில் அவ்வாதாரங்கள் உரிய முறையில் நிருவகிக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

எழுபதாம் ஆண்டுகளின் மத்தியில் பரவலாக அறிமுகப்படுத்தப்பட்டமையும் தனியுரிமைப் பொருளாதார மண்டலம் (Exclusive Economic Zone) மற்றும் 1982 ஆம் ஆண்டில் ஐக்கியநாடு சபையின் கடல் சட்டத்தை நீண்ட ஆழ்ந்த ஆலோசனைக்குப் பின் ஏற்றுக் கொண்டமையும் கடல்வளத்தின் சிறந்த மேலாண்மைக்கான புதியதொரு கட்டமைப்பை ஏற்படுத்தின. இந்தப் புதிய கடல் சட்டவடிவு, உலகில் 90 விழுக்காடு கடல்மீன் வளத்தை அனுபவிக்கின்ற கடலோர நாடுகளுக்கு, அவற்றின் தனியுரிமைப் பொருளாதார மண்டலத்திற்குள், மீன்வள ஆதாரங்களைக் கையாளவும், நன்கு பயனடைவதற்கான உரிமைகளையும், பொறுப்புகளையும் கொடுத்தது. அதற்கு நீடிக்கப்பட்ட தேசிய ஆட்சி எல்லை அவசியமாயிருந்தது. ஆயினும் திறமையான மேலாண்மை (Management) மற்றும் நீண்டகாலம் நிலைநிறுத்தக்கூடிய (Sustainable) மீன்வள மேம்பாட்டுக்குப் போதுமான நடவடிக்கைகள் இல்லை. அனுபவம், நிதி மற்றும் செயல்திறன் வளங்கள் போன்றவற்றில் குறைபாடுகள் காரணமாக, பல கடலோர நாடுகள் கடுஞ்சவால்களை எதிர்நோக்கியபோது, அவைகள் தமது தனியுரிமைப் பொருளாதார மண்டலத்திற்குட்பட்ட மீன்வளத்திலிருந்து அதிகப் பயன்களை தேடின.

அண்மைக் காலங்களில் உலக மீன்பிடித் தொழிலானது விறுவிறுப்பான சந்தையாகவும் உணவுத் தொழிலில் மிகவிரைவாக வளருகின்ற பிரிவாகவும் மாறியுள்ளது. மேலும் கடலோர நாடுகள் இப்புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதில் போட்டிப் போட்டுக் கொண்டு மீன், மீன் உபபொருட்கள் ஆகியவற்றின் பன்னாட்டு வளரும் தேவைக்கு ஏற்ப நவீன மீன்பிடிக் கலன்கள் மற்றும் நவீன முறையில் பதப்படுத்தும் தொழிற்கூடங்களில் நிதி முதலீடு செய்கின்றன. மீன்வள ஆதாரங்கள் நீண்டகாலத்திற்கு

நிலைக்கக்கூடியதன்று என்ற நிலையும் 1980-ஆம் ஆண்டு இறுதியில் கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பும் அதன் வளர்ச்சியும் தெரியவந்தது. மீன்வளப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றைத் தழுவிய மீன்வள மேலாண்மைக்குப் புதிய அணுகுமுறைகள் உடனடியாகத் தேவைப்பட்டன. ஆழ்கடலில் கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பில் ஈடுபடுதல் மற்றும் தனியுரிமைப் பொருளாதார மண்டலத்திற்குள்ளும் வெளியேயும் வேகமாக இடம்பெயரும் மற்றும் இடம் பெயரா மீன் இனங்களை அதிக அளவில் பிடித்தல் போன்ற செயல்களால் மீன்வளமே பெரிதும் குறையும் என்ற கவலையளிக்கும் நிலை எழுந்தது.

1991ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற்ற மீன்வளக்குழுவின் (Committee on Fisheries, COFI) 19வது அமர்வுக் கூட்டத்தில் பொறுப்பான மற்றும் நிலையான மீன்வளத்தினை ஏற்படுத்தும் புதிய கோட்பாடுகளை மேம்படுத்த அழைப்பு விடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1992-ல் கான்கன் (மெக்சிகோ) என்ற இடத்தில் நடந்த முறையான மீன்பிடிப்பு பற்றிய பன்னாட்டு மாநாடு மேற்படி கவலைகளைப் போக்குமுகமாக ஒரு பன்னாட்டு நடத்தை விதித்தொகுப்பை தயாரிக்குமாறு உணவு மற்றும் வேளாண்மை அமைப்பை மேலும் கேட்டுக் கொண்டது. இம்மாநாட்டின் தீர்மானம் குறிப்பாக கான்கன் அறிவிப்பு சுற்றுச் சூழல் மற்றும் மேம்பாடு பற்றி 1992-ஆம் ஆண்டில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் ஓர் முக்கியத்துவம் பெற்றது. குறிப்பாக அதனின் 21-வது விவாதப் பொருள் மிகவும் முக்கியமானதாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு, இடம் பெயரா மீன் தொகுதி மற்றும் வேகமாக இடம்பெயரும் மீன் தொகுதி என்ற பொருள் மீது விவாதிக்கக் கூட்டப்பட்டது. இதற்கு உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு முக்கியமான தொழில் நுட்ப விவரங்களை வழங்கியது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மாநாட்டில் 1993ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற 27வது அமர்வுக்கூட்டத்தில் நடந்த ஆழ்கடலில் மீன்பிடிக் கலன்கள் கடைப்பிடிக்க வேண்டிய பன்னாட்டுக் கடல்பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளுக்கான இணக்கத்தை மேம்படுத்தும் உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேற்கூறியவற்றையும் உலக மீன்வளத்தில் ஏற்பட்ட பிற முக்கியமான வளர்ச்சிகளையும் கருத்தில் கொண்டு உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் நிர்வாகக் குழுக்கள் பொறுப்பார்ந்த மீன்வளத்துக்கான உலக நடத்தை விதித் தொகுப்பை வகுக்குமாறு பரிந்துரைத்தது. இவ்விதித் தொகுப்பு, இந்தச் சட்டமுறைகளுக்கு இயைந்தும் கட்டுப்படுத்த இயலா வகையில் அனைத்து மீன் வளங்களின் பாதுகாப்பு, மேலாண்மை, மேம்பாடு ஆகியவற்றுக்குப் பொருந்தக்கூடிய கொள்கைகளையும் தரங்களையும் நிலைநிறுத்துமாறு அமைதல் வேண்டும். 1995 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31ந் தேதி நடைபெற்ற உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மாநாட்டில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட இவ்விதித் தொகுப்பு, சுற்றுச்சூழலுக்கு இயைந்த நிலையில் நீர்வாழ்

<<

உயிர்வள ஆதாரங்களை நிலைநிறுத்தும் வகையிலும் மீன்பிடித்திட உறுதி செய்து, தேசிய மற்றும் பன்னாட்டு முயற்சிகளுக்குத் தேவையான கட்டமைப்பை ஏற்படுத்தியது.

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு தனது கட்டுப்படுத்தும் ஆணைக்கேற்ப உறுப்பினர் நாடுகளில், குறிப்பாக வளரும் நாடுகளில் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பினை திறமையாகச் செயல்படுத்துவதாக பொறுப்பேற்றுள்ளது. மேலும், அந்நிறுவனம் இவ்விதித் தொகுப்பினால் அடைந்த முன்னேற்றம் பற்றியும், மேற்கொண்டு எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய செயல்களைப் பற்றியும் ஐக்கிய நாடுகள் சபைக்குத் தெரிவிக்கும்.

<<

# முன்னுரை

மீன்பிடிப்பு மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, உலகெங்கும் நிகழ்கால மற்றும் வருங்கால சந்ததியினருக்கு உணவு, வேலை, பொழுதுபோக்கு, வணிகம் மற்றும் பொருளாதார நலன்களை வழங்கும் முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. எனவே மீன்வளத்தைப் பொறுப்பான முறையில் பேண வேண்டும். திறமையான பாதுகாப்பு, மேலாண்மை மற்றும் உயிரின வளங்களின் மேம்பாடுகளை உறுதிப்படுத்தும் நோக்கில் உயிரினவாழ் சூழல் மற்றும் உயிரின வேறுபாட்டை மதித்து நடக்கும் வகையில் பன்னாட்டு நடத்தைக்கான வரையளவுகளை பொறுப்பாக கையாள இவ்விதித் தொகுப்பு ஏற்பாடு செய்கிறது. இவ்விதித்தொகுப்பு சத்துள்ள உணவு, பொருளாதாரம், சமூகம், சுற்றுச்சூழல், பண்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும், மீன்வளத் தொழில்துறையைச் சார்ந்தவர்களின் விருப்பங்களையும் ஏற்றுக் கொள்கிறது. மேலும் இவ்விதித்தொகுப்பு வள ஆதாரத்தின் உயிரியல் தன்மைகளையும், அவற்றின் சுற்றுச்சூழல் மற்றும் நுகர்வோரின் நலன்களையும் மற்ற உபயோகிப்பாளர்களையும் கருத்தில் கொள்கிறது. நாடுகளும், மீன் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும் இந்த விதித்தொகுப்பை கையாளவும் செயல்படுத்தவும் ஊக்கம் அளிக்க வேண்டும்.

## விதிப்பிரிவு 1 : விதித்தொகுப்பின் தன்மையும் வாய்ப்பும்

1.1 இவ்விதித் தொகுப்பு தானாக முன்வந்து செயல்படுத்தத்தக்கது. இருப்பினும் இவ்விதித்தொகுப்பில் சில 1982ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10ஆம் தேதியன்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையில் "கடல் சட்ட மாநாட்டில்[1]" எழுப்பப்பட்ட கருத்துக்களையும், பன்னாட்டுச் சட்ட விதிகளையும் அடிப்படையாகக் கொண்டது. இவ்விதித்தொகுப்பு ஏற்கனவே நாடுகளுக்கிடையே அவற்றைக் கட்டுப்படுத்தும் அளவிலான ஒப்பந்தங்களையும் உள்ளடக்கியது. மேலும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்புக் கூட்டத்தின் தீர்மான எண் 15/93, பத்தி மூன்றின்படி "ஆழ்கடல் மீன்பிடிக் கலன்கள், பன்னாட்டு மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை ஏற்றுச் செயல்படும் உடன்படிக்கையின் (1993)" சரத்துக்களையும் இவ்விதிதொகுப்பு ஒரு பாகமாகக் கொண்டுள்ளது.

---

*[1] கடல் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகள் மாநாடு - 1982, அல்லது பன்னாட்டு உடன்படிக்கைகள் பற்றி இவ்விதத்தொகுப்பில் குறிக்கப்பட்டிருப்பவைகள், எந்த ஒரு நாட்டின் மரபு வழிலான ஒப்பம், பின்னேற்பு, அல்லது இதுபோன்ற பிற உடன்படிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் நிலைபாடுகளுக்கு முரணானதன்று.*

<<

1.2 இவ்விதித் தொகுப்பின் நோக்கம் உலகளாவியது. விதித்தொகுப்பு உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு நாடுகளின் உறுப்பு நாடுகளையும், உறுப்பினரல்லாத நாடுகளையும், தற்போதுள்ள மீன்பிடி தொழில்கள் சார்மண்டல, மண்டல மற்றும் அரசுசார்ந்த அல்லது அரசு சாரா உலக அமைப்புகள் மற்றும் மீன் தொழில்வளத்தைப் பாதுகாப்பதிலும் மேலாண்மை மற்றும் மீன் தொழில் மேம்பாட்டில் சம்பந்தப்பட்ட மீன், மீன் உபபொருட்களைப் பதப்படுத்துதல், விற்பனை செய்தல் மற்றும் மீன் தொழிலில் சம்பந்தப்பட்ட நீர்வாழ் உயிரின சுற்றுச்சூழல் மூலம் பயன்படுத்துவோர் போன்ற அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடியது.

1.3 அனைத்து மீன்வளப்பாதுகாப்பு, மேலாண்மை மற்றும் மேம்பாட்டுக்குப் பொருந்தும் கொள்கைகளையும் வரைமுறைகளையும் ஏற்படுத்துகிறது. மீன்பிடித்தல், பதப்படுத்துதல் மற்றும் மீன், மீன் உபபொருட்களின் வணிகம், மீன்பிடிப்பு நடவடிக்கைகள், மீன்வளர்ப்பு, மீன்வள ஆராய்ச்சி மற்றும் கடலோரப் பகுதி மேலாண்மை, மீன்வள ஒருங்கிணைப்பு போன்றவைகளையும் கூட இவ்விதித் தொகுப்பு உள்ளடக்கியுள்ளது.

1.4 இந்த விதித் தொகுப்பில் குறிப்பிட்டுள்ள "நாடுகள்" என்ற சொல் தகுதிக்கு ஏற்ப ஐரோப்பிய சமூகத்தையும் உள்ளடக்கியது. மேலும் "மீன்வளம்" என்ற சொல், மீன்பிடித்தல் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு என்பவற்றை ஒருசேரக் குறிக்கும்.

## விதிப்பிரிவு 2 : விதித்தொகுப்பின் குறிக்கோள்கள்

விதித்தொகுப்பின் குறிக்கோள்கள் :

அ. பன்னாட்டுச் சட்டங்களின் விதிகளுக்குப் பொருத்தமாக, பொறுப்பான மீன்பிடிப்பு முறைகள் மற்றும் மீன்வளத் தொழில் செயல்பாடுகள் ஆகியவற்றிற்கு இயைந்த முறையில் உயிரியல் தொழில்நுட்ப, பொருளியல், சமூக, சுற்றுச்சூழல் மற்றும் தொழில் கூறுகளைக் கருத்தில் கொண்டு கொள்கைகளை ஏற்படுத்துதல்.

ஆ. மீன்வள ஆதாரங்களின் பாதுகாப்பு மற்றும் மீன்வள மேலாண்மையும் மேம்பாட்டுக்குரிய தேசியக் கோட்பாடுகளை வரையறுத்தல், செயல்படுத்தல் ஆகியவற்றிற்கு ஏற்ற முறையில் கொள்கைகளையும், அளவுகோல்களையும் தோற்றுவித்தல்.

இ. மீன்பிடிப்பு கட்டுப்பாடான தொழிலாகச் செயல்படத் தகுந்த நடவடிக்கைகளை வகுக்கவும் அவற்றைச் செயல்படுத்துவதற்குமான சட்ட மற்றும் அமைப்புகளை உருவாக்குதல் அல்லது செம்மைப்படுத்துதல்.

<<

ஈ. கட்டுப்படுத்துதல் மற்றும் தன்னார்வ உடன்படிக்கைகளை இயற்றல் மற்றும் பிற நாடுகளில் சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்புக்கான விதிமுறைகளை வகுத்தல் மற்றும் அவற்றை செயல்படுத்துவதற்குத் தக்க வகையில் பயன்படுத்திக்கொள்ளத் தேவையான வழிகாட்டு முறைகளை அளித்தல்.

உ. மீன்வள ஆதாரங்கள், மீன்வள மேலாண்மை மற்றும் மேம்பாடு ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப, நிதி மற்றும் பிற ஒத்துழைப்புகளை நல்கி வசதி செய்தல்.

ஊ. அந்தந்த நாட்டு மக்களின் சத்துள்ள உணவுத் தேவைக்கு முன்னுரிமையளித்து, உணவுப் பாதுகாப்புக்கும் உணவுத் தரத்திற்கும் மீன்வளத்தின் பங்கினை அதிகரித்தல்.

எ. நீர்வாழ் உயிரினவள ஆதாரங்களையும், அவற்றின் சுற்றுச்சூழல் மற்றும் கடலோரப் பகுதிகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல்.

ஏ. மீன் மற்றும் மீன் உப பொருள் வணிகத்தை, சம்பந்தப்பட்ட பன்னாட்டு விதிகளுக்கு ஏற்ப விருத்தி செய்தல் மற்றும் இத்தகைய வணிகத்துக்கு மறைமுகத் தடைகளை விதிக்கும் போக்கினைத் தடுத்தல்.

ஐ. மீன்வளம் குறித்து ஆராய்ச்சி, அதேபோல இயற்கைச்சூழல் அமைவை ஏற்படுத்துதல் மற்றும் தகுந்த சுற்றுச்சூழல் காரணிகளை மேம்படுத்துதல்; மற்றும்

ஒ. மீன்வளத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் நடத்தை வரையளவுகளை ஏற்படுத்துதல்.

## விதிப்பிரிவு 3 : பன்னாட்டுச் சட்ட அளவிலான தொடர்புமுறை

3.1 1982ல் கடல்சட்டம் மீதான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் முடிவு செய்தவாறு பன்னாட்டுச் சட்டங்களிலுள்ள விதிகளை ஏற்று, விதித்தொகுப்பின் கருப்பொருள் அறிந்து பயன்படுத்துதல் வேண்டும். இவ்விதித்தொகுப்பில் உள்ளதெதுவும், மாநாட்டில் முடிவு செய்தவாறு பன்னாட்டுச் சட்ட விதிமுறைகள், நாடுகளின் உரிமைகள், ஆட்சி எல்லை மற்றும் கடமைகள் ஆகியவற்றிற்கு முரணானதல்ல.

3.2 விதித்தொகுப்பைப் பின்வருமாறு விளக்கிப் பொருள் கூறுதல் மற்றும் பயன்படுத்துதல் வேண்டும்.

அ. "இடம் பெயரா மற்றும் வேகமாக இடம் பெயரும் மீன் தொகுப்புகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை" சம்பந்தமாக 1982ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10ஆம் தேதியன்று நடந்த கடல்சட்டத்தின் மீதான ஐக்கிய

<<

நாடுகளின் மாநாட்டின் காப்பு வாசகங்களைச் செயலாக்குதல் சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின், நிபந்தனைகளுக்கு ஒத்திருக்கின்ற முறையில் பார்த்துக் கொள்ளுதல்.

ஆ. தாமும் உறுப்பினராக உள்ள பன்னாட்டு உடன்படிக்கையின்படிச் சம்பந்தப்பட்ட நாடுகளின் கடமைகள் உட்படப் பிற நாடுகள் உபயோகப்படுத்துவதற்குரிய சட்டவிதிகளுக்குப் பொருத்தமாக இயக்குதல்.

இ. 1992-ஆம் ஆண்டு கான்கன் அறிவிப்புப்படிச் சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாடு மீதான ரியோ அறிவிப்பு, சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாடு பற்றி ஐக்கியநாடுகள் மாநாட்டில் கடைப்பிடித்த விவாதப்பொருள், குறிப்பாக 21-வது விவாதப்பொருளின் 16-வது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள அறிவிப்புகள் மற்றும் பன்னாட்டுச் சட்ட ஆவணங்களுக்கு ஏற்ப உள்ளவாறு பார்த்துக் கொள்ளுதல்.

## விதிப்பிரிவு 4 : செயலாக்கம், மேற்பார்வை மற்றும் புதுப்பித்தல்

4.1 உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் அனைத்து உறுப்பினர்களும், உறுப்பினரல்லாதவர்களும், மீன்பிடிப் பொருட்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட அரசு சார்ந்த அல்லது அரசு சாரா சார் மண்டல, மண்டல மற்றும் உலக நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நிறுவனம், மீன்வளத்தைப் பயன்படுத்துவோர் மற்றும் மீன் உப பொருட்கள் வணிகத்துடன் சார்ந்த அனைவரும், இவ்விதித் தொகுப்பில் அடங்கியுள்ள குறிக்கோள்கள் மற்றும் கோட்பாடுகளைப் பின்பற்றவும், ஒன்றுபட்டுச் செயலாக்கவும் வேண்டும்.

4.2 ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, தான் ஏற்றுக்கொண்ட பங்கிற்கு ஏற்ப, விதித்தொகுப்பின் பயன்பாட்டையும், செயலாக்கத்தையும் மற்றும் மீன்வளச் செயல்பாடுகளையும் மேற்பார்வையிடும்; மேலும் இதன் தலைமைச் செயலகம் இத்தகைய விவரங்களை மீன்வளக்குழுவிற்கு அறிவிக்கும். உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் உறுப்பினர் அல்லது உறுப்பினரல்லாத அனைத்து நாடுகளும், அரசு சார்ந்த அல்லது அரசு சாரா மீன்வளம் சம்பந்தப்பட்ட பன்னாட்டு நிறுவனங்களும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு இப்பணியில் தீவிரமாக ஈடுபட ஒத்துழைக்க வேண்டும்.

4.3 உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, மீன்வளத்தில் ஏற்படும் வளர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, தகுதிவாய்ந்த அமைப்புகள் மூலம் இத்தொகுப்பினில் மாற்றம்

<<

செய்யலாம். அத்துடன் இவ்விதித்தொகுப்பின் செயலாக்கம் குறித்து மீன்வளக்குழுவிற்கு (COFI) அறிக்கை அளிக்க வேண்டும்.

4.4 நாடுகளும், அரசு சார்ந்த அல்லது அரசு சாராப் பன்னாட்டு நிறுவனங்களும் அமைப்புகளும், மீன்வளத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடையே விதித் தொகுப்புப் பற்றிய அறிவைப் பெருக்குதல் வேண்டும். மேலும் எங்கு இயலுமோ அங்கு திட்டங்களை அறிமுகம் செய்வதின் மூலம், பிற நாடுகள் இவ்விதித் தொகுப்பைத் தாமே முன்வந்து ஏற்றுக்கொள்ளவும், அதனை திறமையாகப் பயன்படுத்துவதின் அவசியத்தைப் புரிந்துக்கொள்ளவும் ஊக்குவிக்க வேண்டும்.

## விதிப்பிரிவு 5 : வளரும் நாடுகளின் சிறப்புத் தேவைகள்

5.1 இவ்விதித் தொகுப்பில் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளைச் செயலாக்க வளரும் நாடுகளின் செயலாக்கத் திறனை கருத்திற்கொள்ள வேண்டும்.

5.2 இவ்விதித் தொகுப்பின் குறிக்கோள்களை அடைய மற்றும் அவற்றைச் செயலாக்க, நாடுகள் தொடர்புடைய அரசு சார்ந்த, அரசு சாராப் பன்னாட்டு அமைப்புகள், நிதி நிறுவனங்கள், வளரும் நாடுகள் குறிப்பாக அவைகளில் மிகக் குறைந்த வளர்ச்சியடைந்த மற்றும் சிறிய தீவுநாடுகள் ஆகியவற்றின் சிறப்புச் சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும், நாடுகள் அங்கீகாரம் அளிக்க வேண்டும். நாடுகள் அரசு சார்ந்த அல்லது அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்புடைய இரு நாடுகளுக்கிடையே தொழில்நுட்ப உதவி, நிதிஉதவி, தொழில்நுட்ப மாற்றம், பயிற்சி மற்றும் அறிவியல் ஒத்துழைப்பு, அவர்களுக்குச் சொந்தமான மீன்வளத்தை மேம்படுத்துவது, அவர்களது திறனை அதிகரிப்பது போன்ற துறைகளில் பரிமாற்றம் செய்து கொள்வது, அதேபோல் ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடுவது மற்றும் அவற்றை எளிதில் அடைதல் போன்றவற்றில் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

## விதிப்பிரிவு 6 : பொதுவான கொள்கைகள்

6.1 நாடுகள் மற்றும் நீர்வாழ் உயிரின வளத்தைப் பயன்படுத்துவோர் சூழல் அமைவை நன்கு பராமரிக்க வேண்டும். மீன்பிடிக்கும் உரிமையைப் போலவே நீர்வாழ் உயிரின வளத்தைத் திறமையாகப் பாதுகாக்கும் மேலாண்மை முறைகளையும், உறுதிப்படுத்திப் பொறுப்பான முறையில் கடமையாற்ற வேண்டும்.

6.2 தரம், பலவகை இனப்பிரிவு பேணுதல், போதுமான அளவில் மீன்வள ஆதாரங்களைத் தக்க வைத்தல், நிகழ்கால மற்றும் எதிர்காலச் சந்ததியினருக்கு

உணவுகாத்தல், பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு மற்றும் மேம்பாடு போன்ற இனங்களைப் பெருக்கி பராமரிக்க மீன்வள மேலாண்மை நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலாண்மை நடவடிக்கைகள் இலக்கிடப்பட்ட இனங்களில் மட்டுமல்லாமல் அதே சூழல் அமைவைச் சேர்ந்த பிற இனங்கள் அல்லது அவைகளுக்கு இணையான வேறு இலக்கிடப்பட்ட இனங்களைச் சார்ந்துள்ளவைகளின் பாதுகாப்பையும் உறுதியாக்கவேண்டும்.

6.3 நாடுகள் அளவுக்கு அதிகமான மீன்பிடிப்பையும், மிகையான மீன்பிடிப்பு திறனையும் தவிர்த்தல் வேண்டும். மேலும், மீன்வள ஆதாரங்களின் உற்பத்தி திறனுக்கும், அவற்றை நிலைநிறுத்தக் கூடிய பயன்பாட்டுக்கும் ஏற்றாற்போல மீன்பிடிப்புமுறை அமைய உறுதியளிக்க வேண்டும். நாடுகள், சரியான நேரத்தில் முடிந்தவரை உயிரினங்களின் தொகையை மறுசீரமைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

6.4 மீன்வள பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முடிவுகள் நடைமுறையிலுள்ள மிகச்சிறந்த அறிவியல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். மீன்வள ஆதாரங்கள் மற்றும் அவைகளின் இயல்பான இருப்பிடங்கள் பற்றிய பாரம்பரிய அறிவு மற்றும் சம்பந்தப்பட்ட சுற்றுச்சூழல், பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். நாடுகள் ஆராய்ச்சிக்கும், புள்ளி விபரங்கள் சேகரிப்புக்கும் முக்கியத்துவம் அளிப்பதோடு, அறிவியல், சூழல் அமைவும் மீன்வளமும் இயைந்த செயல்கள் பற்றிய தொழில்நுட்பம் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். நீர்வாழ் உயிரின சூழல் அமைவு இயற்கை மற்றும் எல்லை தாண்டி செல்லும் தன்மையைக் கருத்தில் கொண்டு இருநாடுகட்கு இடையேயும் மற்றும் பன்னாட்டுக்கு இடையேயும் ஒத்துழைப்பை நல்கி தகுந்த நேரத்தில் ஆராய்ச்சியை ஊக்கிவிக்க வேண்டும்.

6.5 நாடுகள் மற்றும் சார் மண்டல, மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள், இருக்கின்ற மிகச்சிறந்த அறிவியல் உண்மைகளைக் கருத்தில் கொண்டு, நீர்வள ஆதாரங்களைப் பாதுகாக்கவும், சிறந்த மேலாண்மை முறைகளுடன் நீர் சுற்றுச்சூழலைக் காப்பாற்றும் பொருட்டும், அவற்றைப் பேணிக்காக்கவும் முன்னெச்சரிக்கை அணுகுமுறைகளை மேற்கொள்ளவேண்டும். இலக்கிடப்பட்ட மீன் இனங்களையும், அவற்றுடன் இயைந்த அல்லது சார்ந்த மீன் இனங்களையும், இலக்கிடப்படாத மீன் இனங்களையும் அவற்றின் சுற்றுச்சூழலையும், பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். போதுமான அறிவியல் தகவல்கள் இல்லை என்ற காரணத்தைப் பயன்படுத்தி தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதில் காலம் தாழ்த்துவதோ அல்லது தவறுவதோ கூடாது.

<<

6.6 இயன்றவரை பலவகை உயிரினங்களைப் பராமரிக்கவும், உயிரினத்தொகை அமைப்பையும், நீர்வாழ் உயிரினச் சூழல் அமைவையும் பாதுகாக்கவும், மீனின் தரத்தைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழலைக் கருத்திற்கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மீன்பிடிப்புச் சாதனங்களைப் பயன்படுத்துவதை நடைமுறைப் படுத்தவேண்டும். மேலும் அவற்றைப் பெருக்கவும் வேண்டும். எவ்விடத்தில் சரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் சுற்றுச் சூழலுக்குப் பாதுகாப்பான சாதனங்கள் மற்றும் நடைமுறை வழக்கங்கள் உள்ளன எனக் கண்டறிய வேண்டும். மீன்வளத்துக்கான பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளை ஏற்படுத்த முன்னுரிமை அளிக்க வேண்டும். நாடுகளும், நீர்வாழ் உயிரினச் சூழல் அமைவைப் பயன்படுத்துவோரும் கழிவு, இலக்கிடாத இனங்களின் மீன்பிடிப்பு, மீன், மீனல்லாத இனங்கள் இவற்றோடு இயைந்த, சார்ந்த இனங்களின் மீதான பாதிப்பைக் குறைக்க முயல வேண்டும்.

6.7 ஊட்டச்சத்து, தரப் பாராமரிப்பு மற்றும் பொருட்களின் பாதுகாப்பு, கழிவைக் குறைத்து இவற்றின் எதிர்மறை விளைவுகளிலிருந்து சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் என்ற நோக்கில் மீன்பிடித்தல், கையாளுதல், பதப்படுத்துதல் மற்றும் மீன் பொருட்களின் விநியோகம் ஆகியவற்றைச் சிறப்பாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

6.8 சூழல் அமைவில் கடல் மற்றும் நன்னீர் வாழ் மீன்இன வசிப்பிடங்கள், சதுப்பு நிலங்கள், கடற்பாறைகள், கற்றாழைக்காடுகள், காயல்கள், நாற்றங்கால்கள் மற்றும் முட்டையிடும் பகுதிகள் எங்கு உள்ளனவோ அவைகளை முடிந்தவரை தேவையான அளவு பாதுகாக்க வேண்டும். மறு சீரமைப்பும் செய்யப்பட வேண்டும். அப்படிப்பட்ட வசிப்பிடங்களைக் கழிவு, தரக்குறைவு, தூய்மைக்கேடு மற்றும் மனித செயல்பாடுகளால் ஏற்படும் எதிர் விளைவுகள், இதர குறிப்பிடத்தக்க பாதிப்புகள் இவற்றின் மூலம் மனித உடல் நலத்துக்கும் மீன்வளத்திற்கும் தீங்கு ஏற்படா வண்ணம் பாதுகாக்கத் தேவையான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

6.9 நாடுகள், அவைகளின் மீன்வளங்களைப் பாதுகாப்பதற்காகக் கடலோர மண்டலத்தின் பல்வகைப் பயன்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவற்றிற்குத் தக்கவாறு ஒருங்கிணைந்த நடவடிக்கையை மேற்கொண்டு, கடற்கரைப்பகுதி மேலாண்மை, திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் கவனிக்க வேண்டும்.

6.10 அந்தந்த நாடுகளின் தகுதிகளுக்கேற்பவும், பன்னாட்டுச் சட்டத்திற்கிணங்கவும், சார் மண்டல, மண்டலக் கட்டமைப்பின் மூலம் மீன்வளத்தைக் காப்பதற்கு,

அதற்குரிய மேலாண்மை அமைப்புகள் அல்லது சிறப்பு ஏற்பாடுகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்பு முறைகள் அவற்றை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேலாண்மை நடவடிக்கைகள் மூலம் இதனை மேற்பார்வையிடவும் மீன்பிடிக்கலன்கள் மற்றும் மீன்பிடிப்பிற்கு உதவும் கலன்களின் செயல்களைக் கட்டுப்படுத்தவும் திறமையான சரியான அமைப்பைத் தக்கவாறு ஏற்படுத்துதல் வேண்டும்.

6.11 மீன்பிடி மற்றும் மீன்பிடிப்பிற்கு உதவும் கலன்களில், கொடியைப் பறக்கவிட ஆணை அளித்த நாடுகள், அவை விதித்தொகுப்பைச் சரியான முறையில் பயன்படுத்துவதை உறுதிசெய்திட, அவைகளின் மீது சரியான கட்டுப்பாட்டை விதிக்க வேண்டும். அத்தகையை கலன்களின் நடவடிக்கைகள், பன்னாட்டுச் சட்டத்துக்கேற்பவும், தேசிய சார் மண்டல, மண்டல அல்லது உலக அளவில் மேற்கொள்ளப்படும் திறமையான பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளைத் தகர்க்காமலிருப்பதை உறுதி செய்ய வேண்டும். கொடியுடைய கலன்கள், அவைகளின் மீன்பிடிப்பு நடவடிக்கைகள், மீன்பிடி விவரங்களைச் சேகரித்தல் மற்றும் அவற்றை அரசுக்கு அளித்தல் போன்ற கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதை நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும்.

6.12 நாடுகள் தகுதிக்கு ஏற்ப பன்னாட்டுச் சட்டத்துக்கு இணங்க, சார் மண்டல, மண்டல மற்றும் உலக அளவில் அமைந்த மீன்வள மேலாண்மை அமைப்புகள், பிற பன்னாட்டு உடன்படிக்கைகள் அல்லது பாதுகாப்பு மேலாண்மையை வளரச் செய்யும் பிற அமைப்புகள் போன்றவற்றின் விதிகட்கு உட்பட்டு பொறுப்பான மீன்பிடிப்பு நடக்கிறதா என உறுதி செய்ய வேண்டும். மேலும், பாதுகாப்புக் கருதி தேசிய ஆட்சி எல்லைப்பகுதியினுள்ளும் மற்றும் அதற்கு வெளியேயும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு நீர்வாழ் உயிரின ஆதாரங்களையும், அவைகள் பரவியிருக்கும் இடங்களையும் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

6.13 நாட்டின் சட்டங்கள் மற்றும் விதிகளில் அனுமதிக்கப்பட்ட அளவிற்குட்பட்டு விரைவான செயற்பாடுகள் மீது முடிவெடுக்கும் செயல்முறைகள் ஒளிவு மறைவின்றி இருத்தல் வேண்டும். மேலும் விரைவான செயற்பாடுகளுக்கு உரிய நேரத்தில் தீர்வு காணுவதை நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும். நாடுகள் தகுந்த நடைமுறைகளுக்கிணங்க பிற அமைப்புகள், தொழிற்சாலைகள், மீனவர்கள் மற்றும் சுற்றுச்சூழலைச் சார்ந்த நிறுவனங்களுடன் கலந்து ஆய்ந்து, முன்னேற்றச் சட்டங்கள் மேம்பாடு, பன்னாட்டுக்குக் கடனளித்தல் மற்றும் உதவுதல் போன்ற கொள்கைகள் தொடர்பான முடிவுகளைத் தீர்மானிக்க வேண்டும்.

<<

6.14 மீன் மற்றும் மீன் உபபொருட்களுக்கான பன்னாட்டு வணிகம், உலக வணிக அமைப்பு (World Trade Organisation) உடன்படிக்கை மற்றும் தொடர்புடைய பன்னாட்டு உடன்படிக்கைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள கொள்கைகள், உரிமைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கிணங்க நடத்தப்பட வேண்டும். நாடுகள் அவைகளின் மீன் மற்றும் மீன் உபபொருள் பற்றிய வணிகக் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் மீன் மற்றும் மீன் உபபொருட்கள் வணிகத்திற்குத் தடை ஏற்படா வண்ணமும், சுற்றுச்சூழலைப் பாதிக்காவண்ணமும், சத்துணவு குறையா வண்ணமும், சமூக வளர்ச்சிக்குக் கேடு விளையாவண்ணமும் அமைந்திருக்க உறுதி செய்ய வேண்டும்.

6.15 தங்களுக்கிடையே பூசல்களைத் தடுப்பதற்கு நாடுகள் ஒத்துழைக்க வேண்டும். அனைத்து மீன்பிடிப்பு நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான பிரச்சினைகளைப் பொருத்தமான பன்னாட்டு உடன்படிக்கைகளுக்கேற்பவோ அல்லது இருசாராருக்கிசைவான வகையிலோ, விரைவாக, அமைதியான மற்றும் ஒத்துழைப்பு முறையில் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு பிரச்சினைக்கான தீர்வை எதிர்நோக்கித் தொடர்புடைய நாடுகள் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு நடைமுறையில் இயலக்கூடிய தற்காலிக ஏற்பாடுகளை உருவாக்க வேண்டும். மேலும் அவை நடைமுறைக்கு ஏற்ற வகையில் முரண்பாடற்றதாக இருப்பதோடு எதிர்காலத்தில் எடுக்கப்படும் நிலையான தீர்வுக்கு ஏற்றவண்ணமும் அமைதல் வேண்டும்.

6.16 நாடுகள், மீன்பிடிப்பவர்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து மீன்வளர்ப்போர் மற்றும் அவர்கள் சார்ந்துள்ள மீன்வள ஆதாரங்களின் பாதுகாப்பையும், மேலாண்மையையும் அறிந்து கொள்ள ஏதுவாக அவர்களுக்குக் கல்வி மற்றும் பயிற்சிவாயிலாக பொறுப்பார்ந்த மீன்வளம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். நாடுகள் மீன்பிடிப்போரையும், மீன்வளர்ப்போரையும் கொள்கைகளை வகுப்பதிலும், அக்கொள்கைகளை நடைமுறைப் படுத்தவும், செயல்முறைகளை வகுப்பதிலும், விதித்தொகுப்பைச் செயலாக்க வசதியேற்படுத்தும் நோக்கத்தில் அவர்களை ஈடுபடுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

6.17 மீன்பிடிப்பு வசதிகளும், சாதனங்களும், அதே போல அனைத்து மீன்வள நடவடிக்கைகளும், பாதுகாப்பான, நலமிக்க நியாயமான வேலை மற்றும் வாழ்க்கை நிலைகளை அமைத்துக் கொடுத்துள்ளனவா என்பதையும் அவை பன்னாட்டு அமைப்புகள் இயற்றிய பன்னாட்டு அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறைகளுக்கு இணையாக உள்ளனவா என்பதையும் நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

<<

6.18 பாரம்பரிய மற்றும் சிறு அளவிலான மீன்பிடித் தொழிலானது, வேலை வாய்ப்பு, வருவாய் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கு அளிக்கும் முக்கியப் பங்களிப்பை உணர்ந்து, நாடுகள், மீன்பிடிப்பவர்கள் மற்றும் மீன் தொழிலாளர்கள், குறிப்பாகப் பிழைப்பிற்காகச் சிறிய அளவில் மீன்பிடிப்போர் மற்றும் பாரம்பரிய மீன்வளத்தில் ஈடுபட்டிருப்போரின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் வளமான வாழ்விற்கு உரிய வழிவகுக்க வேண்டும். அத்துடன் தகுந்த முறையில் பாரம்பரிய மீன்பிடிப்பு மையங்கள் அமைத்து, அவர்களது தேசிய ஆட்சி எல்லையினுள் உள்ள வள ஆதாரங்களைத் தகுந்தவாறு பாதுகாக்க வேண்டும்.

6.19 நாடுகள் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, வளர்ப்பு அடிப்படையிலான மீன்வளம் ஆகியவற்றை வருவாய் மற்றும் சத்துணவைப் பெருக்கும் ஒரு மாற்று வழிமுறையாகக் கருத வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் மீன்வளம் பொறுப்பாகப் பயன்படுத்தப்படுவதையும், சுற்றுச்சூழல் மற்றும் உள்ளூர் சமுதாயங்கள் மீது தீங்கான பாதிப்புகள் குறைக்கப்படுவதையும் நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும்.

## விதிப் பிரிவு 7 : மீன்வள மேலாண்மை

*7.1 பொதுவானது*

7.1.1 நாடுகளும், மீன்வள மேலாண்மையில் ஈடுபட்டுள்ள அனைவரும் தகுந்த கொள்கை, சட்டம் மற்றும் நிறுவனச் செயல் திட்டத்தின் மூலம், நீண்டகாலப் பாதுகாப்பு மற்றும் நிலைநிறுத்தக்கூடிய மீன்வளத்தை உருவாக்கத்தக்க, பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகள் உள்ளூரிலோ, தேசிய, சார் மண்டல அளவிலோ, மிகவும் சரியான அறிவியல் உண்மைகளின் அடிப்படையில் இருக்க வேண்டும். மீன்வளம் நீண்ட காலம் நீடித்து நிற்க மிகச் சிறந்த முறையில் வளத்தைப் பயன்படுத்திக்கொண்டு, குறிக்கோளை நிலை நாட்டவும், நிகழ்கால மற்றும் வருங்காலத் தலைமுறையினருக்கு இவ்வளம் சீராகக் கிடைக்கின்ற வகையில் பராமரிக்கும் முறைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். குறுகிய நோக்கங்களுக்காக இத்தகைய குறிக்கோள்களை எந்நிலையிலும் விட்டுக் கொடுக்கக்கூடாது.

7.1.2 தேசிய ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன்வளத்தைப் பயன்படுத்துதல், மேலாண்மை செய்தல் ஆகியவற்றில் சட்டப்படியான ஆர்வம் பெற்றுள்ள தொடர்புடைய உள்ளூர்க்காரர்களை நாடுகள் தேடிக் கண்டறிதல் வேண்டும். மேலும் பொறுப்பான மீன்வளத்தை அடைவதில் அவர்களது ஒத்துழைப்பைப்

<<

பெறவும், அவர்களைக் கலந்து முடிவெடுக்கவும் உரிய ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

7.1.3 நாடுகள் எல்லையைக் கடந்து செல்லும் மீன் தொகுதிகள், இடம் பெயரா மீன் தொகுதிகள், வேகமாக இடம்பெயரும் மீன் தொகுதிகள், ஆழ்கடல் மீன் தொகுதிகள் ஆகியவை எந்த இடங்களில், இரண்டு அல்லது கூடுதலான நாடுகளால் பிடிக்கப்படுகின்றனவோ இடம் பெயரா மற்றும் வேகமாக இடம்பெயரும் மீன் தொகுதிகளைச் சேர்ந்த தொடர்புடைய கடலோர நாடுகளுடன் ஒத்துழைத்து, வள ஆதாரங்களின் திறமையான பாதுகாப்பு மற்றும் மேலாண்மையை உறுதி செய்திட வேண்டும். இதனை எந்த இடத்தில் பொருந்துமோ அங்கே இரு தரப்பு, சார் மண்டல அல்லது மண்டல மீன்வள நிறுவனங்கள் அல்லது ஏற்பாட்டின் மூலம் செய்து முடிக்க வேண்டும்.

7.1.4 சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களில் அல்லது அமைப்பில் வள ஆதாரங்கள் எந்த ஒரு நாட்டின் ஆட்சி எல்லையில் இருக்கின்றனவோ, அந்த நாட்டின் பிரதிநிதியைச் சேர்க்க வேண்டும். அதேபோல் மீன்வளம் அல்லது தேசிய எல்லைக்கு அப்பால் உள்ள வள ஆதாரங்களில் உண்மையான ஆர்வமுள்ள நாடுகளின் பிரதிநிதிகளை மேற்படி அமைப்புகளில் சேர்க்க வேண்டும். எங்கே ஒரு சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனம் அல்லது அமைப்பு இருக்கின்றதோ மற்றும் மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளை ஏற்படுத்தும் தகுதி நிலவுகின்றதோ, அத்தகைய நாடுகள் அப்படிப்பட்ட அமைப்புகளில் உறுப்பினராகச் சேர்ந்து அல்லது அப்படிப்பட்ட ஏற்பாடுகளில் பங்கேற்பவராகி ஒத்துழைக்க வேண்டும். மேலும் அவற்றின் பணிகளில் தீவிரமாகப் பங்கேற்க வேண்டும்.

7.1.5 ஒரு நாடு, எந்த ஒரு சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை நிறுவன ஏற்பாட்டில் உறுப்பினராக இல்லை அல்லது சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை மற்றும் ஏற்பாட்டில் பங்கேற்பதாக இல்லை எனினும், தொடர்புடைய பன்னாட்டு உடன்படிக்கைகள் மற்றும் பன்னாட்டுச் சட்டத்துக்கேற்பத் தகுந்த மீன்வள ஆதாரங்களின் பாதுகாப்பு முறைகள் மற்றும் மேலாண்மை முறைகள் அல்லது தகுந்த ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமும் அந்நாட்டின் மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு ஏற்பச் செயல்படுவதின் மூலமும் ஒத்துழைக்க வேண்டும்.

7.1.6 மீன்வளம் தொடர்பாக அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா இவ்விரு அமைப்புகளில் இருக்கும் பிரதிநிதிகள் சார் மண்டல மற்றும் மண்டல மீன்வள மேலாண்மை

<<

நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளில் நடக்கும் கூட்டங்களில் பார்வையாளராக அல்லது வேறுவகையில் தக்கவாறு தொடர்புடைய அமைப்பு அல்லது ஏற்பாட்டின் நடைமுறைகளுக்கேற்பப் பங்கேற்க வாய்ப்பளிக்க வேண்டும். அப்படிப்பட்ட பிரதிநிதிகளுக்கு நடைமுறை விதிக்குட்பட்டு, காலத்தே, அத்தகைய கூட்டங்களின் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளைப் பெறுவதற்கான அனுமதியை அளிக்க வேண்டும்.

7.1.7 நாடுகள், தத்தமக்குரிய தகுதிகள் மற்றும் திறன்களுக்குள் மீன்வள மேற்பார்வை, கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்கான உரிய அமைப்புக்கள் மூலம் மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொண்டு அதே போன்று சார் மண்டல அல்லது மண்டல நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் இவற்றை மேற்கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

7.1.8 நாடுகள் அதிகமான மீன்பிடிப்புத் திறனைத் தடுக்கும் அல்லது ஒழிக்கும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மேலும் நிலை நிறுத்தக்கூடிய மீன்வள ஆதாரங்களின் தன்மைக் கேற்ப மீன்பிடிப்பு முயற்சியளவு இருக்குமாறு மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளை உறுதிப்படுத்தி பயன் விளையத்தக்க வழிமுறைகளை உறுதி செய்ய வேண்டும்.

7.1.9. நாடுகள் மற்றும் சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை தொடர்பாக முடிவெடுக்கும் செயல்முறையில் ஒளிவுமறைவற்ற நிருவாகம் நடந்திட உறுதியளிக்க வேண்டும்.

7.1.10. நாடுகள் மற்றும் சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள், மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க விளம்பரப்படுத்த வேண்டும். மேலும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் அடிப்படையிலும் அவற்றைச் செயலாக்க வேண்டும். அவற்றின் அடிப்படைத் தத்துவங்களையும், காரண காரியங்களையும் மீன்வள ஆதாரங்களை சரியாகப் பயன்படுத்துவதின் தேவையையும் பயன்படுத்துவோருக்கு விளக்கி அவற்றின் செயலாக்கம் எளிய முறையில் இருக்கவும், அதே நேரத்தில் அவற்றைச் செயலாக்க ஆதரவு கிடைக்கும் வண்ணமும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### *7.2 மேலாண்மை நோக்கங்கள்*

7.2.1 மீன்வள ஆதாரங்களை நீண்டகாலம் நிலை நிறுத்துவது என்பது மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்

<<

என்பதனைப் புரிந்து கொண்டு, நாடுகள், சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றை நாடுகளுக்கிடையே அமைத்துக்கொண்டு, மிகச்சிறந்த அறிவியல் உண்மைகளின் அடிப்படையில் வளங்களை பராமரிப்பதற்கான கோட்பாடுகளை வடிவமைத்து உயர்ந்த அளவு உற்பத்தியை விளைவிக்கத்தக்க, திறனுள்ள மற்றும் நிலை நிறுத்தும் திறனுள்ள உரிய சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரக் காரணிகளைக் கருத்திற்கொண்டும், வளரும் நாடுகளின் தனித்தேவைகளைக் கருத்திற்கொண்டும் அவற்றிற்காகவும், தங்களுக்காகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

7.2.2 அப்படிப்பட்ட நடவடிக்கைகள் பின்வரும் செயல்களை நாடுகளிடையே தோற்றுவிக்க வேண்டும். அதாவது,

அ) அதிகமான மீன்பிடிப்புத் திறனைத் தவிர்க்க வேண்டும்; இருப்பிலிருக்கும் மீன் அளவு பொருளாதார அளவில் கட்டுப்பாட்டில் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆ) மீன்பிடிப்புத் தொழில் நிறுவனங்களின் பொருளாதாரச் செயல்பாடுகள் மூலம் பொறுப்பார்ந்த மீன்வளத்தைப் பெருக்க வேண்டும்.

இ) பிழைப்பிற்காக மீன்பிடிப்போர், சிறிய அளவில் மீன்பிடிப்போர் மற்றும் பாரம்பரிய மீனவர்கள் ஆகியோரைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஈ) நீர்வாழ் இனங்களின் உயிரியல் சிதறல்கள், நீர்வசிப்பிடங்கள் மற்றும் சூழல் அமைவு இவற்றைக் கருத்திற்கொண்டு அழிந்துவரும் நீர்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டும்.

உ) உரிய இடங்களில் குறைந்துவரும் உயிரினத் தொகுதியை மீட்பிக்க அல்லது திரும்பவும் பழைய நிலைக்கு கொண்டுவரத் தீவிரமாக முயல வேண்டும்.

ஊ) வள ஆதாரங்கள் மீதான மனித நடவடிக்கைகளால் ஏற்படும் மோசமான சுற்றுச் சூழல் பாதிப்புகளை மதிப்பீடு செய்து உரிய வகையில் சரி செய்ய வேண்டும்.

எ) தூய்மைக்கேடுடையவை, கழிக்கப்பெற்றவை, கைவிடப்பட்டவை, அதிகமாகப் பயன்படுத்தியதால் பாழானதும் தேவையற்றதுமென ஒதுக்கப்பட்டவை ஆகிய மீன்பிடி சாதனங்களால் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மற்றும் இலக்கு நிர்ணயிக்கப்படாத மீன் இனங்கள், மீன் மற்றும் மீன் அல்லாத இனங்கள் மற்றும் இத்தகைய இனங்களைச் சேர்ந்த அல்லது சார்ந்துள்ள இனங்களின் மீது ஏற்படும் தாக்கத்தினை முடிந்த அளவு நடப்பிலுள்ள

<<

முறைகள் மூலம் குறைக்க வேண்டும். இதற்கெனத் தெரிவு செய்த, சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பான, செலவுக்கேற்ற பயன் தரத்தக்க மீன்பிடி சாதனங்கள் மற்றும் தொழில் நுட்பங்களை மேம்படுத்தி அவற்றைப் பயன்படுத்துதல் வேண்டும்.

7.2.3 நாடுகள் இலக்கிடப்பட்ட மீன் தொகுதி மீது சுற்றுச்சூழல் காரணிகளின் பாதிப்பை மதிப்பீடு செய்ய வேண்டும். மேலும் ஒத்த சூழல் அமைவைச் சேர்ந்த இலக்கிடப்பட்ட இனங்கள் அல்லது அவைகளோடு நெருங்கிய தொடர்புடைய அல்லது சார்ந்த மீன் தொகுதிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் கணக்கீடு செய்து அவை சூழல் அமைவோடு கொண்டுள்ள தொடர்புகளை வரையறை செய்தல் வேண்டும்.

### *7.3 மேலாண்மைக் கட்டமைப்பு மற்றும் நடைமுறைகள்*

7.3.1 மீன்வள மேலாண்மை பயனுள்ள வகையில் அமைந்திட அம்மேலாண்மையானது மீன் தொகுதி பரவி இருக்கும் மொத்தப் பகுதியையும் உள்ளடக்கியதாகவும், இம்மண்டலத்தில் முன்பே ஏற்றுக் கொள்ளப்பட்டதும் செயற்படுத்தப்படுவதுமாகிய மேலாண்மை நடவடிக்கை முறைகளையும் அனைத்து வகை நீக்கங்கள் மற்றும் மீன் தொகுதியின் உயிரின ஒற்றுமை, பிற உயிரினத் தன்மைகளையும் கருத்திற் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். மீன் வள ஆதாரம் பரவியிருக்கும் பகுதி மற்றும் வாழ்க்கைச் சுழற்சியின் போது அவை இடம் பெயரும் பகுதி ஆகியவற்றிற் கிடையேயான தொடர்பை வரையறுப்பதில் நடைமுறையிலுள்ள மிகச்சிறந்த அறிவியல் ஆதாரங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

7.3.2 பன்னாட்டு எல்லையைக் கடந்து செல்லும் மீன் தொகுதிகள், இடம் பெயரா மீன் தொகுதிகள், வேகமாக இடம் பெயரும் மீன் தொகுதிகள், ஆழ்கடல் மீன் தொகுதிகள் ஆகியவற்றைப் பாதுகாக்கவும் மேலாண்மை செய்யவும் இத்தகைய மீன் தொகுதிகளுக்கென தொடர்புடைய நாடுகளின் தகுதிகளுக்கிணங்கவும், பொருந்தக்கூடிய இடங்களில் சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகளுக்கிணங்கவும் உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகள் பொருந்தும் வகையில் இணக்கமானதாக இருத்தல் வேண்டும். இவ்விணக்கத் தன்மையானது தொடர்புடைய நாடுகளின் உரிமைகள், தகுதிகள் மற்றும் ஈடுபாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் எட்டப்படுதல் வேண்டும்.

7.3.3 நீண்டகால மேலாண்மைக் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு மேலாண்மைச் செயல்பாடுகளையும், மீன்வள மேலாண்மைத் திட்டங்களையும் மற்றும் மேலாண்மைக் கட்டமைப்பையும் உருவாக்க வேண்டும்.

<<

7.3.4 நாடுகளும், பொருந்துமிடங்களில் சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை அமைப்புகளும் ஏற்பாடுகளும் தகவல் சேகரிப்பு மற்றும் பரிமாற்றம், மீன்வள ஆராய்ச்சி, மேலாண்மை மற்றும் மேம்பாடு உள்ளிட்ட மீன்வளம் தொடர்பான அனைத்து நிகழ்வுகளிலும் பன்னாட்டுக் கூட்டுறவு ஒருங்கிணைவு ஆகியவற்றை வளர்க்கவும் மேம்படுத்தவும் வேண்டும்.

7.3.5 நாடுகள், மீன்வளத்தைச் சாராத ஒரு அமைப்பின் மூலம் ஏதேனும் நடவடிக்கை எடுக்க முயற்சித்தால், அத்தகைய நடவடிக்கையானது தகுதி வாய்ந்த சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை அமைப்பு அல்லது ஏற்பாடு மேற்கொண்ட பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளைப் பாதிக்குமானால், அவ்வமைப்புகளை முடிந்த அளவு முன்னதாகக் கலந்தாலோசிப்பதுடன் அவற்றின் கருத்தையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

### *7.4 தகவல் சேகரித்தல் மற்றும் மேலாண்மை அறிவுரை*

7.4.1 மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கக் கருதுங்கால் மீன்வள ஆதாரங்களின் தற்போதைய நிலை, வள ஆதாரங்கள் மீது முன்மொழியப்படும் நடவடிக்கைகளால் நிகழப்போகும் பாதிப்பு ஆகியவற்றை மதிப்பீடு செய்தல் தொடர்பில் கிடைக்கக்கூடிய மிகச்சிறந்த அறிவியல் ஆதாரங்களை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

7.4.2 மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கு ஆதரவான ஆராய்ச்சி மற்றும் தட்பவெட்ப சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொருளாதார காரணிகள் வள ஆதாரங்களின் மீது ஏற்படுத்தும் விளைவுகளைக் கணிக்கும் ஆராய்ச்சியை ஊக்குவிக்க வேண்டும். அத்தகைய ஆராய்ச்சி முடிவுகளை ஆர்வமுள்ள சாராருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

7.4.3. செலவு, ஆதாயம் மற்றும் மாற்று மேலாண்மையின் விளைவுகளுக்குத் தக்கவாறு அமைந்த முறையின் விருப்ப உரிமை, மீன்பிடிப்பைக் காரண காரியங்களோடு முறைப்படுத்துதல், குறிப்பாக அதிகப்படியான மீன்பிடிப்புத் திறன் தொடர்பான விருப்பங்கள் மற்றும் அளவுக்கு அதிகப்படியான மீன்பிடிப்பு முயற்சி ஆகியவை பற்றிய அறிவைக் கொடுக்கும் ஆய்வுகளை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

7.4.4 நாடுகள் காலத்தே, மீன்பிடிப்புத் திறன் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பதோடு, பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு பற்றிய விவரம் சரியானதாகவும் முழுமையானதாகவும் உள்ளதா என உறுதிப்படுத்த வேண்டும். மேலும் பொருத்தமான பன்னாட்டுத் தரத்துக்கு இணையாக மற்றும் நடைமுறைக்கேற்ற சரியான புள்ளிவிவரப் பகுப்புக்கு வசதியாக, போதுமான விவரங்களுடன்

<<

பராமரிக்கப்படுவதை உறுதியாக்க வேண்டும். அத்தகைய விவரங்கள் முறையாகப் புதுப்பிக்கப்பட்டுத் தகுந்த முறையில் சரிபார்க்கப்பட வேண்டும். நாடுகள் தேவைக்கேற்ற வகையில் அத்தகைய விவரங்களைத் தொகுத்து, தொடர்ந்து வெளியிட வேண்டும்.

7.4.5 நிலைநிறுத்தக்கூடிய மீன்வளத்தை அமைப்பதற்கும், சமூக பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவதற்கும், தகுந்த புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றைப் பகுத்தாய்வு செய்வதன் மூலம் சமூக பொருளாதார மற்றும் நிறுவன நிலைகளை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

7.4.6 நாடுகள் சார்மண்டல மற்றும் மண்டல மீன்வள மேலாண்மை அமைப்புகளின் எல்லைக்குள் உள்ள, மீன் இருப்பு பற்றிய அறிவியல் புள்ளி விவரங்களை, உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவத்தில் தொகுத்து, உரிய காலத்தே அந்நிறுவனங்களுக்கு அல்லது அமைப்புகளுக்கு அளிக்க வேண்டும். மீன் இருப்புகள் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளின் எல்லைக்குள் பரவி இருக்கும் போது அத்தகைய நாடுகளில் மீன்வள மேலாண்மை நிறுவனமோ அல்லது அமைப்போ இல்லாது இருந்தால் தொடர்புடைய நாடு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் ஏற்பாடு மூலம் ஒத்துழைத்துச் சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

7.4.7 சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள், தேவைப்பட்ட புள்ளி விவரங்களைச் சேகரித்து, தேவைப்பட்டவற்றை கமுக்கமாகவும் மற்றவற்றை ஏற்றுக் கொள்ளப்பட்ட படிவத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த அமைப்பினைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் மற்றும் ஆர்வமுள்ளவர்களுக்கும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கிணங்க காலத்தே கிடைத்திட ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும்.

## *7.5 முன்னெச்சரிக்கை அணுகுமுறை*

7.5.1 நாடுகள், நீர்வாழ் உயிரினச் சூழலைப் பாதுகாக்கவும், மீன்வளத்தை நிலைநிறுத்தவும், மீன்வளத்தைப் பாதுகாக்கவும் நீர்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்கவும் சிறந்த முன்னெச்சரிக்கை அணுகுமுறையினை மேற்கொள்ள வேண்டும். நாடுகள், போதிய அறிவியல் தகவல் இல்லை என்ற காரணத்தைக் கொண்டு, மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளைத் தள்ளி வைக்கும் அல்லது எடுக்காதிருக்கும் நிலை எழக்கூடாது.

7.5.2 நாடுகள் முன்னெச்சரிக்கை அணுகுமுறைகளை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர் மீன் தொகுதிகளின் அளவு மற்றும் உற்பத்தித் திறன் பார்வைக்

<<

குறியீடுகள், மீன்களின் இருப்புநிலை மாறுபடும் தன்மை, இறந்துவிடும் மீனினங்கள் உள்ள பகுதி, அதன் விளைவுகள் மற்றும் மீன்கள் பரவுமிடங்கள், மீன்பிடிச் செயல்பாடுகளினால் உண்டாகும் தாக்கம், கழித்து ஒதுக்கப்பட்ட மற்றும் இலக்கு நிர்ணயிக்காத மீனினங்கள், அவற்றைச் சார்ந்த அல்லது அவற்றுடன் இணைந்த உயிரினங்கள், சமூக பொருளாதார நிலைமைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மீன்பிடிப்பை வரையறை செய்வதோடு இத்தகைய தீவிர மீன்பிடிப்பை ஓர் கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டும்.

7.5.3 நாடுகளும், சார் மண்டல அல்லது மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளும், கிடைத்துள்ள மிகச்சிறந்த அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவற்றை நிர்ணயம் செய்ய வேண்டும்.

அ) குறிப்பான இலக்கு நிர்ணயமுடைய மீன்இருப்பின் அளவு வரையறுக்கப்பட்டிருக்கும் போதும், அதே நேரத்தில் அக்குறிப்பிட்ட அளவிற்கு மேல் பிடிக்கும் போதும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை.

ஆ) குறிப்பிட்ட வரம்பு நிர்ணயமுடைய மீன் இருப்பு அளவு, அக்குறிப்பிட்ட அளவுக்கு மேல் பிடிக்கும்போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையானது, வரம்பு நிர்ணய அளவை நெருங்கும்போது, வரம்பை மீறி மீன் இருப்பைப் பிடிக்காமல் பார்த்துக் கொள்வதை உறுதி செய்தல்.

7.5.4. புதிய மீன்பிடி முறைகளினால் சரியான மேலாண்மை முறைகள் அழியும் நிலையிலுள்ள மீன் இனங்களை முடிந்த வரையில் பாதுகாக்க மீன்பிடிவரம்பை நிர்ணயித்தும், மீன்பிடி சமயத்தை நிர்ணயித்தும் நாடுகள் வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மீன்வளப் பாதுகாப்பு மேலாண்மை முறைகளை ஏற்படுத்தி மற்ற நாடுகளுக்கிடையிலும் மீன்பிடிப்பை வரையறை செய்வதுடன் இத்தகைய தீவிர மீன்பிடிப்பை ஓர் கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டும். மீன் இருப்பு நீடித்து நிலைத்திருக்கும் வண்ணமும், இருப்புகள் பற்றியதான போதுமான அளவு புள்ளி விவரங்கள் கிடைக்கும் வரையிலும், மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகள் பற்றிய செயலாக்கமானது தொடர்ந்து நடைமுறையில் இருக்குமாறும் பார்த்துக் கொள்ள வேண்டும். அடுத்தகட்ட நடிவடிக்கைகள் பொருத்தமாக இருப்பின் படிப்படியான மீன்வளர்ச்சிக்கு அனுமதிக்கலாம்.

7.5.5 இயற்கையில் சில மாறுபட்ட சூழ்நிலைகள், நீர் உயிரினங்களின் வாழும் முறைகளின் மீது தாக்கம் ஏற்படுத்தும்போது, நாடுகள் மீன்வளத்தைப் பாதுகாக்கத் தகுந்த அவசர கால நடிவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தேவைக்கு மேற்பட்ட வரம்பை மீறிய மீன்பிடி, மீன்வளத்தை முற்றிலும் அழிக்கும் என அச்சுறுத்தும் நிலை எழும்பொழுது, அவசர கால நடவடிக்கைகளை எடுத்து,

<<

அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். மிகச்சிறந்த அறிவியல் ஆதார உண்மைகளுடன், அத்தகைய நடிவடிக்கைகளைத் தற்காலிகமாகவே எடுக்க வேண்டும்.

## *7-6 மேலாண்மை நடவடிக்கைகள்*

7.6.1 நாடுகள் தமது நாட்டின் மீன்வள ஆதாரங்களுக்கு ஏற்றவாறு அனுமதிக்கப்பட்ட மீன்பிடிப்பு இருக்குமாறு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

7.6.2 நாடுகள் அதிகாரம் வழங்காதவரை மீன்பிடிக்கலன் ஆழ்கடலில் மீன்பிடிக்காமலிருக்கும் வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். தமது நாட்டு ஆட்சி எல்லைக்குள்ளாகப் பன்னாட்டுக் கடல் சட்டம் அல்லது தமது நாட்டுக் கடல் சட்டத்திற்கு ஏற்றவாறாக ஆழ்கடல் மீன்பிடி நடப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

7.6.3 அளவிற்கு அதிகமாக மீன்பிடித்தல் நடக்கும்போது, நெடிது நிலைநிறுத்தக் கூடிய மீன்வள இருப்பிற்கு ஏற்றவாறு மீன்பிடி நடைமுறைகளைச் செயல்படுத்தும் ஏற்பாடுகளை உருவாக்கிப் பொருளாதார ரீதியாக மீனவர்கள் மீன்பிடித்தொழில் செய்து பொறுப்பான மீன்பிடிப்பு நடப்பதை உறுதி செய்ய வேண்டும். மீன்பிடிக் கலன்களின் மீன்பிடி அளவைத் தொடர்ந்து மேற்பார்வையிடுதலும் வேண்டும்.

7.6.4 தற்போது நடைமுறையிலுள்ள மீன்பிடிச் சாதனங்கள், மீன்பிடி முறைகள் மற்றும் பழக்கங்கள் நன்கு ஆராயப்பட்டுச் செயலாக்கப்பெற வேண்டும். மேலும் பொறுப்பான மீன்பிடிக்கு ஏற்றவாறு அமையாத மீன்பிடி முறைகளைப் பழக்கத்திலிருந்து நீக்கிவிட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்று முறைகளைச் செயல்படுத்த நடவடிக்கைகளை எடுத்து உறுதி செய்ய வேண்டும். இந்தச் செயல் முறையின் நடவடிக்கைகள் மீனவ சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்றவாறும், அவர்கள் தங்களின் திறமையினால் வளத்தைப் பயன்படுத்துதற்கேற்றவாறும் அமையுமாறு கவனமுடன் பார்த்துக் கொள்ள வேண்டும்.

7.6.5 நாடுகளும் மீன்துறையின் மேலாண்மை நிறுவனங்களும் பிற அமைப்புகளும் மீனவர்கள் பயன்படுத்தும் பலவகையான மீன்பிடிக்கலன்கள், வலைகள் மற்றும் மீன்பிடி முறைகளினால் தங்களுக்குள்ளும் மீனவர்களுக்கிடையேயும் சச்சரவு நிகழாமல் தடுக்கும் வகையில் மீன்பிடிப்பினைத் தக்கவாறு ஒழுங்கு முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

7.6.6 மீன்வளத்தைப் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் பற்றி முடிவு செய்யும்போது நாட்டின் சட்டங்கள் மற்றும் மீன்பிடி வரையறைகள், மரபு, பழக்கங்கள், அந்த

<<

இடத்தின் மக்களின் தேவை, விருப்பங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும். உள்ளூர் சமுதாய மீனவர்கள் தமது வாழ்க்கைக்கு இந்த மீன்வளத்தினை மிகவும் சார்ந்திருக்கின்றார்கள் என்பதனையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

7.6.7 மீன்வளத்தைப் பாதுகாத்தல், மேலாண்மை நடவடிக்கைகள் ஆகிய முறைகளை மாற்றுவதால் ஏற்படும் செலவுகள், சமுதாயத்திற்குப் பயன்களை நல்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

7.6.8 மீன்வளத்தைப் பாதுகாத்தல், மேலாண்மை நடவடிக்கைகள், இவைகளின் இணக்கத்தால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக, மறு ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். புதிய தகவல் வரும்போது மேலாண்மை முறைகளில் உரியவாறு திருத்தமோ அல்லது நீக்கமோ செய்ய வேண்டும்.

7.6.9 தேவையற்ற மீன்பிடிச் சாதனங்கள், கழித்து ஒதுக்கப்பட்டவை, கழிவு மற்றும் மீன்பிடிப்பில் சிக்கித் தப்பிப்பவைகள் ஆகியவற்றைக் குறைக்கத் தகுந்த நடவடிக்கைகளை மேற் கொள்வதுடன், இலக்கு நிர்ணயிக்கப்படாத இனங்களைப் பிடித்தல், மீன் மற்றும் மீன் அல்லாத இனங்கள் மற்றும் அவை சார்ந்த இனங்களின், குறிப்பாக அழியும் நிலையில் உள்ள இனங்களின் மீதான எதிர்மறையான விளைவுகள் ஆகியவற்றைக் குறைக்க தகுந்த நடவடிக்கையை நாடுகள் எடுக்க வேண்டும். மேலும் சரியான முறையில் பிடிக்கப்படும் மீனின் அளவு, கண்ணியின் அளவு அல்லது மீன்பிடிச் சாதனங்கள், கழித்து ஒதுக்கப்பட்டவை, மீன்பிடிப்பு தடுக்கப்பட்ட காலங்கள் மற்றும் சிறந்த மீன் இருப்பினைப் பாதுகாக்க ஒதுக்கப்பட்ட பகுதிகள் மற்றும் இடங்கள், சில சிறப்பு வாய்ந்த மீன் இனங்களைப் பாதுகாக்க சிறந்த தொழில் நுட்பம் மூலம் உரிய முறையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய நடவடிக்கைகள் மீன் குஞ்சுகள் மற்றும் சினை மீன்களைத் தேவையான அளவில் சிறப்பாகப் பாதுகாக்கப்படவேண்டும். நாடுகள், சார் மண்டல, மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகள், நடைமுறைக்குகந்த, நன்கு வளர்ச்சியடைந்த, தேர்வு செய்யப்பட்ட, சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பான, பயனுள்ள மீன்பிடிக் கருவிகள் மற்றும் தொழில் நுட்பங்களை இயன்றவரை மேம்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

7.6.10 நாடுகள் மற்றும் சார் மண்டல, மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகள், அவைகளால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பு விதிமுறைகளுக்கு ஏற்ப, அழிந்து வரும் மீன்வளங்களைப் பாதுகாக்கவும், அழிவதற்கான அச்சுறுத்தல் உள்ள மீன் வளங்களையும் கண்டுபிடித்து அவ்வினங்களை நிலைநிறுத்தக் கூடிய வகையில் பாதுகாக்கவும் சிறந்த

<<

நடவடிக்கைகளை அறிமுகப்படுத்திட வேண்டும். மேலும் மேற்கண்ட அமைப்புகள், மீன்வளங்கள் மற்றும் அவற்றின் இருப்பிடங்களில் விரும்பத்தகாத அளவிற்கு மீன்பிடித்தல் மற்றும் மனிதச் செயல்பாடுகளினால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுத்து நிறுத்தி மீன்வளங்களை நிலைநிறுத்த சிறந்த முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

### *7.7. செயலாக்கம்*

7.7.1 நாடுகள் மாநிலங்கள் மற்றும் தேசிய அளவில் பயனுள்ள சட்ட மற்றும் நிர்வாகக் கட்டமைப்பை உரியவாறு மீன்வள ஆதாரங்களின் பாதுகாப்பு மற்றும் மீன்வள மேலாண்மைக்காக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

7.7.2 அத்துமீறல்களைத் தடுக்க கையாளப்படும் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள், மறுப்பு, திரும்பப்பெறல், ஏற்பளிப்பைத் தற்காலிகமாக நீக்குதல் போன்றவற்றை நன்கு நடைமுறைப்படுத்தி, நடைமுறையிலிருக்கும் மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளுக்கு இசைய மறுக்கும் சமயத்தில் மீன்பிடி அதிகாரத்தை நிறுத்தி வைத்தல் போன்ற கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டு திறம்படச் செயல்பட வேண்டும்.

7.7.3 நாடுகள் தேசிய அளவிலான சட்ட விதி முறைகள் மூலம் சிறந்த முறையில் மேற்பார்வையிடுதல், கட்டுப்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் சட்ட முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இதனைத் தகுந்த நேரத்தில் கண்காணிப்புச் செயல்பாடுகள், ஆய்வுத் திட்டங்கள் மற்றும் கலன்களை மேற்பார்வையிடும் திட்டங்கள் மூலம் செயற்படுத்த வேண்டும். சார் மண்டல, மண்டல நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மூலம் அந்நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் ஏற்றுக்கொண்ட நடைமுறைகளுக்கேற்ப நடவடிக்கைகளை உருவாக்கி நிறைவேற்ற வேண்டும்.

7.7.4 நாடுகள், சார் மண்டல மற்றும் மண்டலத்தில் அமைந்திருக்கும் மீன்வளத்துறையில் மேலாண்மை செய்யும் நிறுவனங்களுடனும், நிதியுதவி செய்யும் பிற நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு அவர்கள் மீன்வளப் பொருட்களுக்கு நிதியுதவி அளிப்பதனை ஆதரிக்க வேண்டும். இதுபோன்ற நிதியுதவி வேறுபட்ட இவ்விரு நிறுவனங்களுக்கும் நிதி வழங்குவதிலும், பெற்றுக் கொள்வதிலுமாய் இருக்கவேண்டும். மீன்வளத்தின் பாதுகாப்பிற்கும், மீன்வள ஆராய்ச்சி மேற்கொள்வதற்கும் மற்றும் மேலாண்மை செய்வதற்கும் தேவையான நேரத்தில் அல்லது அவ்வப்பொழுது ஏற்படும் செலவுகளை திரும்பப்பெற கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

<<

7.7.5 நாடுகள், சார் மண்டல மற்றும் மண்டலத்தில் உள்ள மேலாண்மை நிறுவனங்கள் அல்லது அமைப்புகளில் உறுப்பினர்களாக அல்லது பங்கேற்பவர்களாக இருப்பவர்கள், பன்னாட்டு அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அத்தகைய நிறுவனங்களின் கட்டமைப்புக்கு உட்பட்டு, பன்னாட்டுச் சட்ட விதிப்படி, அத்தகைய நிறுவனங்களும் அமைப்புகளும் ஏற்படுத்திய மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளைப் பொருட்படுத்தாத உறுப்பினரல்லாத, பங்கேற்பவர்கள் அல்லாத நாடுகளின் கொடியுடைய மீன்பிடிக் கலன்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### *7.8 நிதி நிறுவனங்கள்*

7.8.1 தொடர்புடைய பன்னாட்டு உடன்படிக்கைகளுக்கு முரண்படாமல், நாடுகள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை ஊக்குவித்துக் கடன் அல்லது அடமானம் வழங்குவதற்கு மீன்பிடிக் கலன்கள் அல்லது மீன்பிடிப்புக்குத் துணை புரியும் கலன்கள் ஆகியவற்றைப் பயன்பெறும் உரிமை மாநிலத்தின் ஆட்சி எல்லைக்கு அப்பால், பன்னாட்டு மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகள், மீறல்களை அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ள பகுதியில் கொடிகளைப் பறக்கவிட வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கக்கூடாது.

## விதிப் பிரிவு 8 : மீன்பிடிப்பு முறைகள்

### *8.1 அனைத்து நாடுகளின் கடமைகள்*

8.1.1 நாடுகள் ஒவ்வொன்றும் மீன்பிடிப்பைத் தமது அதிகாரமுடைய கடல்நீர் எல்லைக்குட்பட்ட பகுதியில் செயல்படுத்துவதுடன் பொதுவிதிக்குட்பட்டுப் பொறுப்பான முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

8.1.2 நாடுகள், தங்களால் மீன் பிடிக்க வழங்கப்பட்ட உரிமம் தொடர்பான புள்ளிவிவரங்களை சேகரித்து நாளது வரை அதனைச் சரி செய்து, உகந்த கால இடைவெளிகளில் பதிவேடுகளில் பதிவு செய்து பராமரிக்க வேண்டும்.

8.1.3 நாடுகள், அவர்களால் அனுமதிக்கப்பட்ட மீன்பிடி முறைகள் தொடர்பான புள்ளிவிவரங்கள் அனைத்தையும், உலகத் தர நிர்ணய நிலையில் சேகரித்துச் சரியான கால இடைவெளிகளில் பதிவேடுகளில் பராமரிக்க வேண்டும்.

8.1.4 நாடுகள் பன்னாட்டு சட்ட விதிமுறைகளுக்கேற்ப தங்களது சார் மண்டல, மண்டலக் கட்டமைப்புக்களில் அல்லது மீன்வளத்துறை மேலாண்மை நிறுவனங்களில் ஒரு

<<

அமைப்பினை ஏற்படுத்தி, ஒருங்கிணைந்த செயல்பாடுகளை வகுத்து, கூட்டுக் கவனிப்பு, கட்டுப்பாடு, கடுங்கண்காணிப்பு, கட்டாயப்படுத்துதல் ஆகிய செயல்முறைகளின் மூலம், மீன்பிடி முறைகளை இயக்குதல் மற்றும் நீர் எல்லைக்கு அப்பால் செயல்படாமை போன்றவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும்.

8.1.5 நாடுகள், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரின் உடல்நலம் மற்றும் பாதுகாப்புத்தரங்கள் குறையாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும், இந்தத் தரமானது பன்னாட்டு உடன்படிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள குறைந்தபட்சத் தேவைகள், வேலை மற்றும் பணியாற்றுதல் விதிமுறைகளை ஒட்டியிருக்க வேண்டும்.

8.1.6 நாடுகள், தனியாகவோ, பிற அண்டை நாடுகளுடனோ அல்லது தொடர்புடைய பன்னாட்டு நிறுவனங்களுடனோ சேர்ந்து, ஒருங்கிணைந்த மீன்பிடி முறைகளை வகுத்துக்கொள்ளவும் மற்றும் மீட்புப்பணிகளை ஒருங்கிணைந்த முறையில் நடத்தவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

8.1.7 நாடுகள், மீனவர்களின் கல்வித்தரம் மற்றம் திறன்களை, கல்வி மற்றும் பயிற்சியின் மூலம் ஊக்கப்படுத்துவதுடன், பொருத்தமான தொழில்முறைத் தகுதியுடையவர்களையும் கண்டறிந்து ஊக்கப்படுத்த வேண்டும். இத்தகைய திட்டங்கள் தீட்டும் பொழுது அனைத்துப் பன்னாட்டுத் தரம் மற்றும் வழிகாட்டி வழிமுறைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

8.1.8 நாடுகள், மீனவ மக்கள்தொகை, அவர்களது தொழில் திறன், தகுதிகள் மற்றும் அவர்களிடம் உள்ள பிற தகுதிச் சான்றிதழ்கள் போன்ற புள்ளிவிவரங்கள் அனைத்தையும் பன்னாட்டு விதிமுறைகளுக்கேற்பச் சரியான பதிவேடுகளில் பதிவு செய்து பராமரிக்க வேண்டும்.

8.1.9 நாடானது ஏற்புடைய நடவடிக்கைகளுக்கும் புறம்பாகக், குற்றச் செயலில் ஈடுபடும் மீன்பிடிக் கலன்களின் மாலுமிகள் மீது சரியான நடவடிக்கை எடுக்க உரிய விதிகளை வகுக்க வேண்டும். விதிமுறைகளை மீறும் இவர்கள் கலன்களை இயக்குதலை மறுத்தல், தற்காலிக நீக்கம், இவர்தம் சான்றிதழை நீக்கம் செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

8.1.10 நாடுகள், தொடர்புடைய துறையில் உலக அமைப்புகளின் உதவியுடன் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் கல்வி மற்றும் பயிற்சி மூலமாக இவ்விதித் தொகுப்பில் குறிப்பிட்டுள்ள முக்கியத் தகவல்களையும், சுற்றுச்சூழல் தொடர்பான பாதுகாப்பு வழிவகைகளையும், தரத்தையும் பின்பற்றிடப் பெருமுயற்சி செய்து மீன்பிடி கலன்கள் மற்றும் கருவிகளை இயக்குபவர்களுக்குப் பொறுப்பான மீன்பிடி

விதிமுறைகளைக் கற்றுக்கொடுத்து, உலக அமைப்புகளின் மரபுகளைப் பின்பற்றச் செய்ய வேண்டும்.

### *8.2 கொடி-நாடுகளின் கடமைகள்*

8.2.1 கொடி நாடுகள், மீன்பிடிப்பதற்கு உரிமை பெற்ற மீன்பிடிக் கப்பல்களில் அந்த நாட்டின் கொடியைப் பறக்கவிடுதல், மீன்பிடிப்பதற்கு உரிமம் வழங்கியமை, கப்பலின் விவரங்கள், கப்பலின் உரிமையாளர் மற்றும் பிடிக்க வேண்டிய மீன் விவரங்கள் அடங்கிய பதிவேடுகளைப் பராமரிக்கத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

8.2.2 நாடுகளின் மீன்பிடிக் கலன்கள் அந்நாட்டின் குறிப்பிட்ட எல்லையைக் கடந்து மீன்பிடிக்கச் செல்லக்கூடாது. தவிரவும், தொடர்புடைய நாட்டின் ஆணையின்றி அவர்களது கடல் எல்லையில் நுழையக் கூடாது. மீன்பிடிக் கலன்கள் அவற்றிற்குரிய சரியான அலுவலரால் மீன்பிடிக்க வழங்கப்பட்ட உரிமத்தை எப்பொழுதும் கலன்களில் வைத்திருக்க வேண்டும்.

8.2.3 மீன்பிடிக் கலன்கள் கொடி வழங்கப்படாத பிற நாட்டின் ஆழ்கடல் பகுதியில் மற்றும் தமது எல்லைக்குள் கடலில் மீன்பிடிக்க நேரிடும்போது, அனைத்து நாடுகளின் கலன்களிலும் ஒரே மாதிரியான அடையாளம் காணும் வகையில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு நிர்ணயித்த தர வழிகாட்டி முறைகளுக்கு ஏற்ற வகையில் குறியீடுகள் இருக்க வேண்டும்.

8.2.4 மீன்பிடிக் கருவிகளில் நாட்டு விதிகளுக்கேற்ப குறியீடு செய்வதன் மூலம் மீன்பிடிக் கருவியின் உரிமையாளரை அடையாளம் காண முடியும். மீன்பிடிக் கருவிகளில் குறியீடு செய்யும்பொழுது பல நாடுகளும் ஒரே மாதிரியான, அடையாளம் காணக்கூடிய விதியினைப் பின்பற்ற வேண்டும்.

8.2.5 கொடி நாடுகளின் மீன்பிடிக் கலன்கள் மற்றும் மீனவர்களின் உடைமைக்கும் உயிருக்கும் பாதுகாப்பு தரக்கூடிய வழிகாட்டி முறையினைப் பன்னாட்டு மரபுகளுக்கேற்ப பின்பற்றிட ஆணையிட வேண்டும். பன்னாட்டு சட்டதிட்ட விதிமுறைகளுக்குப் பொருந்தாத சிறிய கலன்களுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வித்தல் வேண்டும்.

8.2.6 நாடுகள், அனைத்துலக வளர்ச்சி, ஒப்புமை, பன்னாட்டு மீன்வளம் காத்தல் போன்ற இனங்களில் மேலாண்மை முறைகளின் ஒப்பந்தத்தில் உறுப்பினரல்லாத நாடுகளை. ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஊக்குவித்து, அவர்களை விதிமுறைகளுக்கு உட்படச்செய்து ஒப்பந்தத்தில் உறுப்பினராகச் சேர்க்க முயல வேண்டும்.

<<

8.2.7 சரியான விதிகளுக்குப் புறம்பாகப், பாதுகாக்கப்பட்ட பகுதி, விதிவிலக்கான பகுதியில் மீன்பிடித்தல் போன்றவற்றில் ஈடுபடும் கலன்களின் உரிமையாளர்கள் மீது கொடியுடைய நாடுகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தேசிய நடைமுறை விதிகள், பிற சட்ட விதிமுறைகளை மீறுபவர்களின் மீதும் சரியான நடவடிக்கை எடுப்பதுடன், அவர்களுக்குக் கிடைக்கும் பலன்களைத் தடைசெய்து மேலும் அவர்கள் தொடர்ந்து குற்றம் புரியாமலிருக்க நடவடிக்கை எடுத்தல், மீன்பிடிக்கத் தடைசெய்தல், மீன்பிடிக்கும் உரிமத்தையும் நீக்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

8.2.8 கொடியுடைய நாடுகள் மீன்பிடிக் கலன்களுக்குக் காப்புறுதி செய்ய உரிமையாளர்களையும், முதலீட்டாளர்களையும் வலியுறுத்த வேண்டும். உரிமையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் இந்தக் காப்புறுதிப் பத்திரத்தை வைத்திருப்பதன் மூலம் கலன்களையும், கலன்களின் பணியாளர்களையும் பாதுகாப்பதுடன், கலன்களுக்கோ அல்லது நபர்களுக்கோ இழப்போ அல்லது சேதமோ ஏற்படும்போது மூன்றாவது நபர்களின் மூலம் அவர்களின் முதலீட்டை வட்டித் தொகையுடன் ஈட்டுத்தர உரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

8.2.9 கொடியுடைய நாடுகள், கலன்களில் பணிபுரிவோர் தங்கள் தாயகத்திற்குத் திரும்ப விரும்பினால் "கடலில் பணிபுரிவோர் மறுவாழ்வு மரபு" (புதுப்பிக்கப்பட்டது. 1987 (எண் : 166) விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும்.

8.2.10 மீன்பிடிக் கலன்களுக்கு விபத்து ஏற்படும் போதோ அல்லது கலன்களில் இருக்கும் போது ஒருவருக்கு விபத்து நேரிட்டாலோ அது தொடர்பான விவரங்களை உடனடியாகப் பெறுவதுடன் அப்படிப்பட்ட தகவலை, எங்கு இயலுமோ அங்கே பன்னாட்டுக் கடலைச் சார்ந்த நிறுவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

### *8.3 துறைமுக நாடுகளின் கடமைகள்*

8.3.1 துறைமுக நாடுகள் தங்களுடைய நாட்டின் சட்ட விதிமுறைகட்கும், அனைத்துலக விதிகட்கு அல்லது ஏற்பாட்டிற்கு ஏற்றவாறும் நடந்து கொள்வதோடு மற்ற நாடுகளும் இந்தச் சட்ட தொகுப்பின் நோக்கங்களை அடைவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதுடன் மற்ற நாடுகள் மீன்பிடித்தல் தொடர்பாக ஏற்படுத்தியுள்ள சட்டவிதிமுறைகளையும், நடவடிக்கைகளையும் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு துறைமுக நாடுகள் செயல்படும்போது மற்ற நாடுகளின் கலன்களுக்கு எதிராகக் கண்மூடித்தனமாக செயல்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

<<

8.3.2 துறைமுக நாடுகள், கொடியுடைய நாடுகளுக்குச் சரியான முறையில் தங்களது சட்டவிதி மற்றும் பன்னாட்டுச் சட்டவிதிகளுக்கு ஏற்ப உதவ வேண்டும். மேலும் நாடுகளின் மீன்பிடிக் கலன்கள் துறைமுகத்திலோ அல்லது அண்மையிலுள்ள கடற்கரை ஓரத்திலோ ஒதுங்கி இருக்கும்போது கொடியுடைய நாடுகள் சார் மண்டல, மண்டல மற்றும் உலக மேலாண்மைப் பாதுகாப்பு அளவீட்டுமுறை அல்லது பல நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாசுக்கட்டுப்பாடு, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கலன்களில் உள்ள வேலைகளுக்கு ஏற்றவாறு கொடி நாடுகள் தங்களுக்கு உதவுமாறு துறைமுக நாடுகளைக் கேட்டுக்கொள்ளலாம்.

### *8.4 மீன்பிடி முறைகள்*

8.4.1 நாடுகள், மீன்பிடிக்கும்போது மனிதஉயிர்ப் பாதுகாப்புக்கும், உலகக் கடலாண்மை நிறுவனத்தின் அனைத்துலக மீன்பிடிச் சட்ட விதிமுறைகளுக்கும், கடலில் மோதலைத் தடுக்கும் சட்ட விதிமுறைகளுக்கும் உட்பட்டு நாடுகள் செயல்படுவதனால் நாடுகளிடையே தீவிர மோதல் போன்றவற்றைத் தடுத்து நிறுத்துவதுடன், உலகக் கடலாண்மை நிறுவனம் விரும்பும் கடல் தடை அமைப்பு மூலம் கடற் சுற்றுச்சூழலை பாதுகாப்பதுடன் மீன்பிடிக் கருவிகளுக்குச் சேதம் மற்றும் இழப்பு ஏற்படாமல் தடுக்கவும் பொறுப்புறுதி தரவேண்டும்.

8.4.2 வெடிப்பொருட்கள், நச்சுப் பொருட்கள் மற்றும் இவைகளுடன் ஒப்பிடக்கூடிய அளவுக்கு முற்றிலும் கடல் சூழ்நிலையை அழிக்கும் தன்மையுடைய முறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி மீன்பிடித்தலை முற்றிலும் தடை செய்ய வேண்டும்.

8.4.3 நாடுகள் பல்வேறு மீன்பிடி முறைகளைப் பற்றிய ஆவணங்களைத் தயாரித்து மீன், மீன் அல்லாத கடல் உயிரினங்கள் ஆகியவற்றை எதிர்கால தேவை கருதி கடலிலேயே விட்டு வைக்கவும், கழித்தொதுக்கப்பட்டவை போன்றவற்றையும், மீன் இருப்பு விவரங்களையும் அறிந்து அவற்றை முறையாகத் தொகுத்து பிற அமைப்புகளுக்குத் தகவல்கள் அளித்துக் கொண்டிருக்கவும் வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளை மேலும் சீர்திருத்த பார்வையிடுபவர், மேற்பார்வை திட்டம் போன்றவற்றைத் தீட்டி நாடுகள் முடிந்த அளவு செயல்பட வேண்டும்.

8.4.4 நாடுகள், சரியான நவீன தொழில் நுட்ப முறையினைக் கையாளுவதுடன், நாட்டின் பொருளாதார நிலையினையும் கவனத்தில் கொண்டு பிடிக்கப்பட்ட மீன்களைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

8.4.5 நாடுகள், அவற்றுடன் தொடர்புடைய தொழில் மையங்களுடன் இணைந்து மீன்பிடித் தொழில் வளர்ச்சிக்கும், தொழில் நுட்பச் செயலாக்கத்திற்கும், கழித்தொதுக்கலைக் குறைப்பதற்குரிய இயக்க முறைகளை ஊக்குவிக்க

<<

வேண்டும். கழித்தொதுக்கும் வகைகளைச் சேர்ந்த மீன்பிடிக் கருவிகள் மற்றும் முறைகளைப் பயன்படுத்துவதனைக் குறைத்து, தப்பிக்கும் மீன்களின் பிழைப்பு விகிதத்தை அதிகரிக்கும் மீன்பிடிக் கருவிகள் மற்றும் முறைகளை வளர்க்க வேண்டும்.

8.4.6 நாடுகளின் கூட்டு முயற்சியின் மூலம் மீன்பிடியில் உரிய தொழில் நுட்ப முறைகளைப் புகுத்திக் கருவிகள் மற்றும் இயக்கும் முறைகளை மேம்படுத்துவதினால் மீன்பிடிக் கருவிகளின் இழப்பு குறைக்கப் படுவதுடன், குறைந்த அல்லது கைவிடப்பட்ட மீன்பிடிக் கருவிகளால் மோசமான விளைவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம்.

8.4.7 நாடுகள் வணிக ரீதியிலான புதிய மீன்பிடிப்பு முறைகளையும், செயல்பாடுகளையும் கடல் பகுதியில் மேற்கொள்வதற்கு முன்னர், நீர் வாழ்வனவற்றின் இருப்பிடம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படக்கூடும் என்பதனைச் சரியாக ஆராய்ந்த பின்னர், தகுந்த மீன்பிடி முறைகள் மற்றும் கருவிகளைக் கையாள உறுதி கொள்ள வேண்டும்.

8.4.8 மீன்பிடிக் கருவிகளால் சுற்றுச்சூழல் மற்றும் சமூகச் சூழ்நிலை மீது ஏற்படும் தாக்கம், குறிப்பாக மீன்பிடிக் கருவிகளை பலமுறைகளில் வேறுபடுத்துவதினால் பரவிய நிலை, உயிரினங்கள் மற்றும் கடலோர மீனவ சமுதாயத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் ஆகியவற்றைக் கூர்ந்தாய்ந்து மேம்படுத்த வேண்டும்.

### *8.5 மீன்பிடிக் கருவிகளைத் தெரிவு செய்தல்*

8.5.1 நாடுகள், மீன்பிடிக் கருவிகள், மீன்பிடி முறைகள், நவீன முறைகள், நடைமுறைக்கியன்ற சாத்தியப்பட்ட முறைகள் ஆகியவற்றை நன்கு தெரிவு செய்வதன் மூலம் கழிவு மற்றும் கழித்தொதுக்கலைக் குறைக்கலாம்; அழியும் நிலையில் உள்ள உயிரினங்களைக் காக்கலாம்; மீன் இருப்புக் குறைவினையும், தேவையற்ற மீன்களைப் பிடிப்பதனையும் தடுக்கலாம். மீன் மற்றும் மீன் அல்லாத கடல் உயிரினங்களையும் அவற்றைச் சார்ந்த அல்லது அவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் இனங்களையும் பிடித்தலைத் தடுக்கத் தொழில் நுட்பக் கருவிகளை உருவாக்க வேண்டும். இதற்கு மீனவர்கள் தேர்ந்தெடுத்த மீன்பிடிக் கருவிகளைப் பெருக்கி, மீன்பிடி முறையின் வளர்ச்சிக்கும் ஒத்துழைப்புத் தர வேண்டும். நாடுகள் புதிய வளர்ச்சி பற்றிய தகவல்களும், தேவைகளும் எல்லா மீனவர்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

8.5.2 மீன்பிடிக் கருவிகளைத் தேர்ந்தெடுக்கும் திறனை மேம்படுத்துவதற்காக, நாடுகள் அவற்றின் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளை வரையறை செய்யும்போது

தேர்ந்தெடுத்த மீன்பிடிக் கருவிகளின் தகுதி, மீன்பிடி முறைகள் மற்றும் செயல் முறைத் திறன்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

8.5.3 நாடுகள், அவற்றைச் சார்ந்த நிறுவனங்களுடன் இணைந்து, அத் தொழில் நுட்ப முறைகளையும் மீன்பிடிக் கருவிகளின் தரம் மற்றும் மீன்பிடி முறைகளையும் ஒழுங்குபடுத்த ஆய்வு மேற்கொள்ளல் வேண்டும்.

8.5.4 மீன்பிடிக் கருவிகளைத் தெரிவு செய்யும்பொருட்டு, மீன்பிடி முறைகளையும், செயல்முறைத் திறன்களையும் வகுக்க ஆராய்ச்சித் திட்டங்களைப் பன்னாட்டு ஒன்றுமையுடன் செயல்படுத்தி, அத்திட்டங்களின் கண்டுபிடிப்புக்களையும் வெளியிட்டு, தொழில் நுட்ப மாற்றத்திற்கு வழிவகை செய்ய வேண்டும்.

### *8.6 மேம்பட்ட ஆற்றல்*

8.6.1 நாடுகள் தகுந்த தரம் மற்றும் வழிகாட்டும் முறைகளை வளர்த்துக் கொள்வது இன்றியமையாததாகும். மீன்துறையில் மீன்பிடிப்பு மற்றும் பிடித்த மீன்களைப் பயன்படுத்தும் முறை ஆகியவற்றில் ஆற்றல் குறையா வண்ணம் செயலாற்றிட அது வழிவகுக்கும்.

8.6.2 உரிமையாளர்கள், முதலீட்டாளர்கள், மேலாளர்கள் ஆகியோர் மீன்வளத்துறையில் குறிப்பாக மீன்பிடிக் கலன்களில் அவற்றின் ஆற்றலுக்கு ஏற்ற கருவிகளைப் பொருத்தச் செய்து, தகுந்த தொழில் நுட்பத்தைப் பரவச் செய்தல் மூலம் நாடுகள் மீன்பிடித் தொழிலை மேம்படுத்த வேண்டும்.

### *8.7 நீர்வாழ் உயிரினச் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்*

8.7.1 நாடுகள், தகுந்த சட்ட விதி மற்றும் நடைமுறை விதிகளை ஏற்படுத்திக் "கப்பல்களிலிருந்து ஏற்படும் கழிவினைத் தடுக்க நடந்த பன்னாட்டு மரபு," கூட்டத்தில் முடிவு செய்தவாறு, 1973ஆம் ஆண்டு திருத்தப்பட்ட உடன்படிக்கை மூல வரைவு (PROTOCOL 1978) இது தொடர்பான, மார்பால் 73/78 (MARPOL 73/78) அறிக்கை ஆகியவற்றில் உள்ளபடி நடக்க வழி வகை செய்ய வேண்டும்.

8.7.2 கப்பல்கள் இயங்கும்போது அவற்றிலிருந்து வெளிப்படும் கழிவுப்பொருட்கள் மற்றும் மாசுப்பொருட்களைக் கப்பலிலேயே தூய்மைப்படுத்தி நீரினில் வெளியேற்றுவது தொடர்பில் மார்பால் 73/78ல் அறிவுறுத்தியபடி நடக்க ஒவ்வொரு மீன்பிடிக் கலனிலும் அதன் தன்மைக்கேற்பப் பொருத்தமான மாசு நீக்கும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன என்று மீன்பிடிக் கலன்களின் உரிமையாளர்கள், முதலீட்டாளர்கள், மேலாளர்கள் ஆகியோர் பொறுப்புறுதி தர வேண்டும்.

<<

8.7.3 மீன்பிடிக் கலன்களின் உரிமையாளர்கள், முதலீட்டாளர்கள், மேலாளர்கள் ஆகியோர் மீன்பிடிக்கச் செல்லும்பொழுது கப்பலில் முடிந்தவரையில் தேவையான கழிவை உண்டாக்காத குறைந்த அளவு உள்ளாற்றலுள்ள பொருள்களை மட்டும் எடுத்துச் செல்ல வேண்டும்.

### *8.8 வெளி மண்டலத்தைப் பாதுகாத்தல்*

8.8.1 நாடுகள் மீன்பிடிக் கலன்களில் இருந்து அபாயகரமான நச்சு வாயுக்கள் வெளியேறுவதை முடிந்த வரையில் குறைக்கத் தேவையான தரம் மற்றும் வழி காட்டி முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

8.8.2 மீன்பிடிக் கலன்களின் உரிமையாளர்கள், முதலீட்டாளர்கள், மேலாளர்கள் ஆகியோர் தங்களது கலன்களிலிருந்து வெளிவரும் கழிவு ஓசோன் படலத்தைச் சிதைவடையச் செய்யும் மாசுப் பொருட்களை வெளியிடாத வகையில் சரியான மாசு நீக்கும் கருவிகளை கலன்களில் பொருத்த வேண்டும். மீன்பிடிக் கலன்களில் பணிபுரியும் பொறுப்பானவர்கள் கலன்களைச் சரியான முறையில் இயக்குதல், கலன்களில் உள்ள இயந்திரங்களைப் பராமரித்தல் முதலியவற்றை நன்கு கற்றுணர்ந்தவர்களாக இருந்தல் வேண்டும்.

8.8.3 நாடுகளின் தகுதி வாய்ந்த அதிகாரிகள் மீன்பிடிக் கலன்களில் இருந்து வெளியாகும் குளோரோ-புளோரோ கார்பன்கள் (Chloro-Fluoro-Carbons) மீன்பிடிக் கலனில் உள்ள குளிர்பதனப் பெட்டிகளில் இருந்து வெளியேறும் ஹைட்ரோ குளோரோ-புளோரோ கார்பன்கள் (Hydrochloro-Fluoro Carbons) பற்றியும் கப்பல் கட்டும் தொழிற்சாலைகளுக்கும் அவற்றைச் சார்ந்த மீன்பிடித் தொழிற்சாலைகளுக்கும், மாசுகட்டுப்பாடு முறைகள் பற்றியும் தெரிவித்து, மாசுபடுதலைக் கட்டுப்படுத்த வேண்டும்.

8.8.4 மீன்பிடிக் கலன்களின் உரிமையாளர்கள் மற்றும் மேலாளர்கள், குளிர்பதனப் பெட்டிகளில் குளோரோ-புளோரோ கார்பன்கள் மற்றும் ஹைட்ரோ குளோரோ-புளோரோ கார்பன்கள் போன்ற வாயுக்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து பிற பொருட்களைப் பயன்படுத்தலாம். தீயணைப்புக் கருவிகளில் பயன்படுத்தும் ஹாலோன்ஸ் (HALONS) போன்ற வாயுக்களைப் பயன்படுத்தலாம். இவ்வகையான மாற்றங்களை அனைத்துப் புதிய மீன்பிடிக் கலன்களிலும் பயன்படுத்துதல் வேண்டும்.

8.8.5 நாடுகளின் மீன்பிடி உரிமையாளர்கள், முதலீட்டாளர்கள், மேலாளர்கள், மீனவர்கள் ஆகியோர் ஹைட்ரோ குளோரோ-புளோரோ கார்பன்கள், குளோரோ-

புளோரோ கார்பன்கள், ஹாலோன்ஸ் ஆகிய வாயுக்களைப் பயன்படுத்துவதில் பன்னாட்டு வழிகாட்டி நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

### *8.9 துறைமுகங்கள் மற்றும் மீன்பிடிக் கலன்கள் தங்கும் இடங்கள்*

8.9.1 துறைமுகங்கள் மற்றும் மீன்பிடிக் கலன்கள் தங்கும் இடங்களை அமைக்கும் போது இவற்றோடு நாடுகள் கீழ்வருவனவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அ) மீன்பிடிக் கப்பல்களைப் பாதுகாப்பாக நிறுத்தவும், மீன்பிடித் துறைமுகங்களில் கப்பல்களைப் பழுது பார்க்கவும் போதுமான பாதுகாப்பான வசதிகளைச் செய்து, வணிகர்கள், ஏலதாரர்கள், பொருட்களை விலைக்கு வாங்குபவர்கள் போன்றோருக்கும் போதுமான வசதிகளைச் செய்து தர வேண்டும்.

ஆ) போதுமான அளவு நன்னீர் விநியோகம் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

இ) எண்ணெய்க் கழிவுகள், எண்ணெய் கலந்த நீர் மற்றும் பயனற்ற மீன்பிடிக் கருவிகள் போன்ற கழிவுகளை அகற்றிட உரிய முறைகளைப் புகுத்த வேண்டும்.

ஈ) மீன்பிடித் தொழிலினாலும், பிற துறைக் கழிவுகளினாலும் மாசுக் கட்டுப்பாடு நிலை குறையா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உ) கடல் அரிப்பு மற்றும் வேதிப் படிமங்களினால் உண்டாகும் விளைவுகளைச் சமாளிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

8.9.2 நாடுகள், மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க இடத்தைத் தேர்வு செய்யவும், மேம்பாடு செய்யவும் ஒரு நல்ல நிறுவனத்தை அமைத்து, உலக நாடுகள் வரையறுத்த விதிமுறைகளுக்கு ஏற்பத் துறைமுகங்களை அமைக்க வேண்டும். கடற்கரையிலுள்ள நிலப்பகுதி மேலாண்மைப் பொறுப்பேற்றுள்ள அலுவலர்களின் ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

### *8.10 கைவிடப்படவேண்டிய அமைப்புகள் மற்றும் இதர பொருட்கள்*

8.10.1 நாடுகள் தேவைக்கு அதிகமான, பயனற்றுக் கடற்கரையிலுள்ள பொருட்களை அகற்றும்போது பன்னாட்டுக் கடல் மேண்மை நிறுவனத்தின் தரம் மற்றும் வழிகாட்டுதல்கள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். மேலும் நாடுகள் பயனற்ற மற்றும் பிற பொருட்களைப் பற்றி முடிவு எடுக்கும் முன்னர் உரிய மீன்துறை அலுவலர் மற்றும் தொடர்புடைய அலுவலர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

<<

### *8.11 செயற்கைப் பாறைகள் மற்றும் மீன்களை ஓரிடத்தில் திரள வைக்கும் சாதனங்கள்*

8.11.1 நாடுகள் கடலில் செயற்கை முறையில் சில பாறை அமைப்புகளை (Artificial Reefs), கடற்பயணத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் கடல் மட்டத்திற்கு அல்லது நீர் மேல் தெரியும் அளவிற்கு ஏற்படுத்தி, மீன் இருப்புத் தொகையினை அதிகரிக்கச் செய்து அதிக மீன்பிடிப்பிற்கு வழி கோல வேண்டும். இதுபோன்ற செயற்கை அமைப்புகளினால் ஏற்படும் பயன், கடல்வாழ் உயிரினங்களின் மீதும், சுற்றுப்புறச் சூழல் மீதும் இந்த அமைப்பு ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவற்றை ஆய்வு செய்தல் வேண்டும்.

8.11.2 நாடுகள் செயற்கை பாறை அமைப்புகளை உண்டாக்கத் தேவையான பொருட்கள் மற்றும் நிலவியல் ரீதியான இடத்தைத் தெரிவு செய்யும் போது பன்னாட்டு மரபுகளையும், சுற்றுப்புறச் சூழல், கடற்பயணம், பாதுகாப்பு விதிமுறைகள் ஆகியவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

8.11.3 நாடுகள் கடற்கரை மற்றும் நிலப்பகுதி மேலாண்மைத் திட்டக் கட்டமைப்புக்கு ஏற்ற முறைகளை வகுத்துச் செயற்கைப் பாறைகளின் அமைப்பு மற்றும் மீன் தொகுதிகள் வாழுமிடங்கள் ஆகியவற்றை அமைக்க வேண்டும். இந்தச் செயற்கை அமைப்பினை ஏற்படுத்துவதற்கும், வளர்ச்சியடையச் செய்வதற்கும், தகுதி வாய்ந்த அலுவலர்களின் அனுமதி தேவைப்படும் என்பதுடன், பிழைப்பிற்காக மீன்பிடிப்போர் மற்றும் பாரம்பரிய மீனவர்கள் ஆகியோரின் தேவையையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

8.11.4 நாடுகள் செயற்கைப் பாறை அமைப்பு அல்லது மீன் தொகுதிகள் வாழுமிடங்கள் பற்றிய விவரம், வழித்தடம் மற்றும் பதிவேடுகளை வரைந்து பராமரிக்கும் பொறுப்பான அலுவலர்களுக்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அலுவலர்களுக்கும் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதற்கான உறுதிமொழி தரவேண்டும்.

## விதிப் பிரிவு 9 : நீர்வாழ் உயிரினவளர்ப்பை மேம்படுத்துதல்

9.1 தேசிய ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொறுப்பார்ந்த நீர்வாழ் உயிரின வளர்ப்பையும், வளர்ப்பை அடிப்படையாகக் கொண்ட மீன்வளத்தையும் மேம்படுத்துதல்.

<<

9.1.1 நாடுகள் பொறுப்பார்ந்த நீர்வாழ் உயிரின வளர்ப்பை மேம்படுத்துவதற்கு ஏதுவாகப் பொருத்தமான சட்டமுறையிலான மற்றும் ஆட்சிக் கட்டமைப்புகளை உருவாக்கிப் பராமரித்து மேம்படுத்த வேண்டும்.

9.1.2 நாடுகளில் கிடைக்கும் மிகச் சிறந்த அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையில் நீர்வாழ் உயிரின வளர்ப்பின் பொறுப்பார்ந்த மேம்பாடு மற்றும் மேலாண்மை, பிறப்பு மரபியலின் விரிவு மற்றும் சூழல் அமைவுகளின் இயைந்த தன்மையின் மீது நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவற்றை ஆய்வு செய்து ஊக்குவிக்க வேண்டும்.

9.1.3 நாடுகள் நீர்வாழ் உயிரின வளர்ப்பின் மேலாண்மை முறைகளைத் தேவையான அளவு நாளதுவரை வகுத்துத் திட்டங்களை உண்டாக்கி இவ்வளர்ச்சிச் சூழல் அமைவில் நீண்ட காலம் மீன் இருப்பை நிலைநிறுத்தி, நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளும் மற்ற வளங்களை அளவோடு பகிர்ந்து கொள்ளுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

9.1.4 நாடுகள் நீரில் வளர்க்கக்கூடிய உயிரினங்களைப் பெருக்கும் திட்டத்தினை மேற்கொள்வதினால் அருகில் உயிர் வாழும் சமுதாயங்களுக்கும், மீன்பிடி இடங்களுக்கும், எவ்வகைப் பாதிப்பும் ஏற்படுத்தாது என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

9.1.5 நாடுகள் பயன்தரத்தக்க நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளை வரையறுத்துத் தகுந்த சமயத்தில் சுற்றுப்புறச் சூழல் நிலைமைகளை மதிப்பீடு செய்து தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும். இதன் குறிக்கோளாவது, சூழல் அமைவு மாற்றங்கள், சமூக-பொருளாதார மற்றும் நீரை அதிகமாகப் பெறுவதினால் வரும் மாற்றங்கள், நிலத்தைப் பயன்படுத்துதல், கழிவுகளை வெளியேற்றல், மருந்து மற்றும் வேதியியற் பொருட்களினால் வரும் மாற்றங்கள் ஆகியவற்றின் தாக்கம் நீர்வாழ் உயிரின மீன்வளர்ப்பின் மீது மிகக் குறைவாக இருக்குமாறு பார்த்துக் கொள்வது ஆகும்.

### *9.2 நீர் சூழல் அமைவுகளுக்கு அப்பாலுள்ள இடங்களில் பொறுப்பார்ந்த நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் வளர்ப்பு முறையை அடிப்படையாகக் கொண்ட மீன்வளத்தைப் பெருக்குதல்*

9.2.1 நாடானது தனது தேசிய எல்லைக்குள் நீர் சூழலமைவுகளின் எல்லைக்கு அப்பாலுள்ள பகுதியில் பொறுப்பான முறையில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு

முறைகளை மேற்கொள்வதினாலும், நிலை நிறுத்தக்கூடிய மீன்வளத்தை மேம்படுத்த ஒத்துழைப்பு நல்குவதின் மூலமும் பாதுகாக்க வேண்டும்.

9.2.2 நாடானது தனது அருகில் உள்ள நாடுகளை உரிய வகையில் மதித்துப் பன்னாட்டு விதிகளின்படி சரியான இனங்களை இருப்புச் செய்தல், இடம் மற்றும் நீரில் வளர்க்ககூடிய உயிரினப் பராமரிப்பு போன்றவற்றில் அண்டை நாடுகளின் நீரகச் சூழலமைவுகள் பாதிக்காத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும்.

9.2.3 நாடுகள் தமது நீர் சூழல் அமைவு எல்லைக்கப்பால் வெளிநாட்டு உயிரினங்களை வளர்க்கும் போது உரியதருணத்தில் கண்டிப்பாகத் தமது அண்டை நாடுகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

9.2.4 நாடுகள் ஒரு பொறுப்பான அமைப்பை நிறுவித், தகவல் தொடர்பு இணைப்புக்களுடன் பல்வேறு விவரக்குறிப்புக்களை சேகரித்து அவற்றைத் தேசிய, சார் மண்டல மற்றும் மண்டல நிறுவனங்களுக்கு அனுப்பி நீர்வாழ் உயிரின வளர்ப்பின் பெருக்கத்திற்கான திட்டங்கள் தீட்டுவதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

9.2.5 நாடுகள் தேவையான பொழுது சரியான அமைப்புகளை உருவாக்கி ஒத்துழைப்பதுடன், நீர்வாழ் உயிரின வளர்ப்பில் பயன்படுத்தப்படும் இடுபொருட்களின் விளைவுகளையும் கண்காணிக்க வேண்டும்.

### *9.3 நீரகப் பிறப்பு மரபு சார்ந்த வள ஆதாரங்களை நீர்வாழ் உயிரின வளர்ப்புக்காகவும் வளர்ப்பு அடிப்படையிலான மீன்வளத்துக்காகவும் பயன்படுத்துதல் வேண்டும்.*

9.3.1 நாடுகள் சரியான மேலாண்மை மூலம் பிறப்பு மரபியல் ஜீன்கள் மாறா வண்ணம் பாதுகாப்பதுடன், நீர்வாழ் உயிரினங்களின் இயைந்த தன்மைகளையும் மற்றும் சூழலமைவையும் பேண வேண்டும். வெளிநாட்டு இனங்களை இறக்குமதி செய்யும் போது, அதனால் ஏற்படும் விரும்பத்தகாத விளைவுகளைக் குறைக்க முயற்சி செய்ய வேண்டும். மேலும் பிறப்பு மரபியல் மாற்றம் செய்து இருப்பு செய்த இனங்களையும், வெளிநாட்டு இனங்களையும் இருப்பு செய்ய வாய்ப்பு உள்ளபோது, நாடுகள் முடிந்த வரையில் அதிக அளவில் பிறப்பு மரபு மாற்றங்கள் கொண்ட மீன்கள், நோய் பரப்பும் மீன்கள், தப்பியோடும் மீன்கள் ஆகியவற்றைப் பரவாமல் செய்யத் தகுந்த சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். இவைகள் பிற நாட்டுக்குள் தப்பிவிடா வண்ணமும் பார்த்துக்கொள்ள வேண்டும். நாடுகள் மோசமான பிறப்பு மரபியல் கொண்ட மீன்களையும், நோய் பரப்பும் மீன்களையும், பண்ணையில் வளரும் மீன்கள் இயற்கைச் சூழலுக்கு தப்பிப்பதையும் தவிர்க்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

<<

9.3.2 நாடுகள் நீர்வாழ் உயிரினங்களை அறிமுகம் செய்யும்பொழுதும், மாற்றம் செய்யும் பொழுதும் பின்பற்ற வேண்டிய பன்னாட்டு விதித் தொகுப்பினை விரிவுபடுத்துதல், பின்பற்றுதல், நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றிற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

9.3.3 நீர் வாழ் உயிரினங்களால் ஏற்படும் நோய்களையும், விரும்பத்தகாத விளைவுகளையும் இயல்பாக வளர்ந்து பெருகும் மீன்கள் மற்றும் வளர்ப்பு இனங்கள் மீது உண்டாக்குவதையும் பிறப்பு மரபுத் தன்மையை மேம்படுத்தப் பயன்படுத்தும் இனப்பெருக்க உயிரினங்கள், வெளிநாட்டிலிருந்து தருவிக்கும் மீன்களை அறிமுகம் செய்யும்போதும், முட்டை, நுண்மீன்குஞ்சு, இளம் உயிரிகள் அல்லது விரலிகள், சினை மீன்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்யும்போதும் அவற்றை இடமாற்றம் செய்யும்போதும் நாடுகள் பன்னாட்டு விதித் தொகுப்பின் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

9.3.4 நாடுகள் சிறந்த சினை மீன்இனங்களைத் தேர்வு செய்து முட்டை, நுண்மீன்குஞ்சு மற்றும் இளம்பருவ உயிரினங்களை வளர்ப்பதில் சிறந்த வழிமுறைகளை ஊக்குவிக்க வேண்டும்.

9.3.5 நாடுகள், அழியும் அபாய நிலையில் உள்ள இனங்களைக் காப்பாற்றவும், வளர்ப்புத் தொழில் நுட்பங்களை மேம்படுத்தி அவற்றின் மறுவாழ்விற்கும், இருப்பின் அளவினை உயர்த்தவும் மற்றும் அவ்வினங்களைப் பாதுகாத்து அவைகளின் பிறப்பு மரபு மாற்றங்களைத் தடுக்கவும் உரிய ஆராய்ச்சி மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### *9.4 பொறுப்பார்ந்த நீர்வாழ் உயிரின வளர்ப்பின் உற்பத்தி நிலை*

9.4.1 நாடுகள் பொறுப்பார்ந்த நீர்வாழ் உயிரின மீன்வளர்ப்பு முறைகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் கிராமப்புற மக்களுக்கும், உற்பத்தி அமைப்புகளுக்கும், மீன்வளர்ப்போருக்கும் ஆதரவு நல்க வேண்டும்.

9.4.2 நாடுகள் மீன்வளர்ப்போர் மற்றும் அவர்களைச் சேர்ந்த சமுதாயத்தினர் சிறந்த முறையில் நீர் வாழ் இன உற்பத்தி முறைகளையும் அவற்றின் மேம்பாட்டு முறைகளையும் தெரிந்து கொள்ளச் சிறந்த மேலாண்மைப் பயிற்சியளிக்கவேண்டும்.

9.4.3 நாடுகள் சிறப்பான முயற்சிகள் மேற்கொண்டு, தீவனத் தயாரிப்பு சார்ந்த பொருள்கள், உரம் மற்றும் எருக்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த ஊக்குவிக்கவேண்டும்.

9.4.4 நாடுகள் சிறந்த மீன் பண்ணை அமைக்கும் முறைகள் மற்றும் மீன் நல மேலாண்மைப் பயிற்சி முறைகளை உருவாக்கி, அவற்றின் சுகாதாரமான முறைகளையும், தடுப்பூசி மருந்துகள் பயன்படுத்துவதையும் ஊக்குவிக்க வேண்டும். கிருமி நாசினிகள், சுரப்பிநீர்கள் (Hormones), மருந்துகள், உயிர்கொல்லி மற்றும் நோய் தடுக்கும் வேதிப்பொருட்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பாகவும் பயன் விளையத்தக்க வகையிலும் குறைந்த அளவில் துய்ப்பது பற்றி உறுதி செய்ய வேண்டும்.

9.4.5 நாடுகள் மீன்வளர்ப்பிற்குப் பயன்படுத்தப்படும் வேதிப்பொருட்களினால் மனித நலத்திற்கும், சுற்றுப்புறச் சூழ்நிலைக்கும் தீங்கு ஏற்படா வண்ணம் அவற்றின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்த வேண்டும்.

9.4.6 நாடுகள் வளர்ப்புக் குளத்தில் இருந்து வெளியேறும் குப்பை, தொழிற்சாலைக் கழிவுகள், இறந்த அல்லது நோய்வாய்ப்பட்ட மீன்கள், தேவைக்கு அதிகமான பயனற்ற விலங்கின மருந்துகள் மற்றும் விரும்பத்தகாத விளைவை ஏற்படுத்தும் வேதிப்பொருட்கள் போன்றவற்றால் மனித உடல் நலத்திற்கும், சுற்றுச் சூழலுக்கும் தீங்கு விளைவிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

9.4.7 நாடுகள் உணவுப் பாதுகாப்பு மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட நீர்வாழ் உயிரின உணவுப்பொருட்களின் தரம் மற்றும் மதிப்பு குறையாமல் இருக்க மீன்பிடிக்கும் முன்னரும், பிடிக்கும் போதும், பிடித்த பின்னர் பதப்படுத்தும் போதும், சேமித்து வைக்கும் போதும் வேறு இடங்களுக்கு அனுப்பும் போதும், போதிய முயற்சிகளை மிக்க கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும்.

## விதிப் பிரிவு 10 : கடலோர மேலாண்மையினுள் ஒருங்கிணைந்த மீன்வளம்

### *10.1 நிறுவனக் கட்டமைப்பு*

10.1.1 நாடுகள் கடலோரச் சுற்றுப்புறச்சூழலில் எளிதில் மாறக்கூடிய தன்மை, அதன் இயற்கை வளத்தின் முடிவுள்ள தன்மை மற்றும் கரையோரம் வாழும் சமூகத்தின் தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வளங்களை நெடிது நிலைநிறுத்துவதற்கு ஒருங்கிணைந்த பயன்பாட்டைக் கருதிச் சட்டரீதியான மற்றும் நிறுவனங்கள் மூலமாகப் பொருத்தமான கொள்கைகளை உருவாக்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.

10.1.2 கடற்பரப்புக்கள் மனித சமுதாயத்திற்குப் பலவகையில் பயன்படுவதைக் கருத்தில் கொண்டு கடல்மேலாண்மைத் திட்டம் தீட்டுதல் மற்றும் கடலோர வளர்ச்சிப்

பணிகளைப் பற்றி முடிவெடுக்கும்போது மீன்துறை சார்பான பிரதிநிதிகளையும் மற்றும் மீனவ சமுதாயத்தினரையும் சரியான முறையில் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும் என்பதற்கு நாடுகள் உறுதி தரவேண்டும்.

10.1.3 நாடுகள் சரியான நிறுவன மற்றும் சட்ட விதிக் கட்டமைப்புகளைச் சரியான முறையில் கடற்கரை வளங்களை மேலாண்மை செய்யும் வகையிலும் உருவாக்கிக் கொள்வதுடன் அதே நேரத்தில் கடலோர மீனவ சமுதாயத்தின் உரிமைகளும் அவர்கள் பயன்படுத்தும் மீன்பிடி முறைகளும் அவர்களின் வளர்ச்சியை எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் நிலைநிறுத்தக்கூடிய மீன்வள மேம்பாட்டுடன் இயன்றளவு இணக்கமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

10.1.4 நாடுகள் மீன்வளத்தை உபயோகிப்பவர்களுக்கும் மற்றும் கடற்கரை வளங்களை பயன்படுத்துபவர்களுக்கும் ஏற்படும் பிரச்சினைகள், மோதல்களை தடுக்கும் வகையில் மீன்துறை சம்பந்தமான செயற்பாடுகளை சிறப்பாக மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

10.1.5 நாடுகள் மீன்வளத்துறை பிரிவுகளுக்குள்ளே மற்றும் மீன்வளத்தை பயன்படுத்துபவர்களிடையே மற்றும் கடற்கரை வளங்களை பயன்படுத்தும் மற்றவர்களிடையே உருவாக்கும் மோதல்களை தீர்த்துக் கொள்ள தகுந்த நிர்வாக மட்டத்தில் நடைமுறைகளையும் ஏற்பாடுகளையும் உருவாக்க முயல வேண்டும்.

### *10.2 கொள்கை நடவடிக்கைகள்*

10.2.1 கடல் வளப் பாதுகாத்தல், நாடுகள் மக்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கி அவற்றின் மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கச் செய்வதுடன் கடல் வளம் பாதிக்கப்பட்டால் உடன் அவர்கள் பங்கு கொண்டு அதனை நிவர்த்தி செய்ய முனைப்புடன் செயல்படவேண்டும்.

10.2.2 கடல் வளங்களைப் பல வகைகளில் பயன்படுத்துவதற்காக முடிவெடுக்கும் பொழுது, பொருளாதார, சமுதாய, பண்பாட்டுக் காரணிகள் ஆகியவற்றின் மேம்பாடுகளை நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

10.2.3 நாடுகள் கடலோர மேலாண்மைகளுக்காக, கொள்கைகள், விதிமுறைகளை உண்டாக்கும்போது அவற்றால் ஏற்படும் எதிர்பாரா இன்னல்கள் மற்றும் உறுதியற்ற தன்மை ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

<<

10.2.4 நாடுகள் தங்களது திறமைக்கு ஏற்றவகையில், கடல் மேலாண்மையில் ஒரு விரிவான கடலோரச் சுற்றுப்புறச் சூழலைக் கண்காணிக்கும்பொழுது, இயற்பியல், வேதியல், உயிரியல், பொருளாதார மற்றும் சமுதாய அளவுகோல்களைப் பயன்படுத்தி அவற்றின் தன்மைக்கேற்பவும் சட்டவிதிமுறைகளை அமைத்து அவற்றை மேம்படுத்த வேண்டும்.

10.2.5 நாடுகள் கடலோர மீன்வள மேலாண்மை குறிப்பாகச் சுற்றுச்சூழல், உயிரியல், பொருளாதார, சமூக, சட்ட மற்றும் நிறுவனத் தன்மைகளை மேம்படுத்த உதவும் வகையில் பலதுறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

### *10.3 மண்டல ஒத்துழைப்பு*

10.3.1 நாடுகள் நிலைநிறுத்தக்கூடிய கடலோர வள ஆதாரங்களைப் பயன்படுத்துவதிலும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் அருகில் உள்ள நாடுகள் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

10.3.2 மீன்பிடி செயல்பாடுகளினால் கடற்கரை நீரகச் சூழல் அமைவு எல்லையைக் கடந்து சுற்றுச்சூழலானது விரும்பத்தகாத அளவில் பாதிக்கப்படும்பொழுது நாடுகள் :

அ) சரியான நேரத்தில் தகவல்களை அளிப்பதுடன், முடியுமானால் இயற்கைவளம் பாதிக்கப்படும் நாட்டிற்கு முன் அறிவிப்பு அறிக்கையையும் கொடுக்க வேண்டும்.

ஆ) எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அந்த நாடுகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

10.3.3 நாடுகள், கடலோர மீன்வள மேலாண்மையினை மேம்படுத்துவதற்காகச் சார் மண்டல மற்றும் மண்டல அளவில் ஒத்துழைக்க வேண்டும்.

### *10.4 நடைமுறைப்படுத்துதல்*

10.4.1 நாடுகள், திட்டம், வளர்ச்சி, மீன்வளப் பாதுகாப்பு மற்றும் கடலோரப்பகுதி மேலாண்மை போன்றவற்றில் ஈடுபடும் தேசியக் குழுமங்களுக்கு ஒத்துழைப்பு தந்து ஒருங்கிணைக்கும் வகையில் உரிய அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

10.4.2 நாடுகள், குழுமங்கள் மற்றும் மீன்துறையைச் சார்ந்த குழுமங்கள் கடலோர மேலாண்மையைக் கையாள சரியான தொழில் நுட்பத்திறனும், நிதி ஆதாரமும் பெற்றனவாக உள்ளன என்பதனை உறுதி செய்ய வேண்டும்.

<<

# விதிப் பிரிவு 11 : பிடித்த மீனைக் கையாளும் முறைகளும், வணிகமும்

## *11.1 பொறுப்பார்ந்த முறையில் மீனைப் பயன்படுத்திக் கொள்ளல்*

11.1.1 நாடுகள், துய்ப்போருக்குத் தரமான முழுவதும் கலப்படமற்ற மீன் மற்றும் மீன் உபபொருட்களைத் தர, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

11.1.2 நாடுகள், தரக்கட்டுப்பாட்டு முறைகளை வழிமுறைப்படுத்தித் துய்ப்போருக்குத் தரமான சத்தான மீனுணவை வழங்க முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், வணிக ஏமாற்று வேலைகளைத் தடுக்கவும் வேண்டும்.

11.1.3 நாடுகள், பாதுகாப்பான தரக்கட்டுப்பாட்டிற்கான குறைந்த பட்சத் தகுதிகளை நிர்ணயித்து, அவை இந்தத் தொழில் முழுவதிலும் திறம்படக் கையாளப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். இந்த தரக்கட்டுப்பாட்டுத் தகுதிகளைச் செயல்படுத்தும் பொழுது உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு /உலக சுகாதார நிறுவனம் கோடெக்ஸ் அலிமென்டரியஸ் குழு (Codex Alimentarius Commission) மற்றும் அதனைச் சார்ந்த நிறுவனங்கள் அல்லது பிற அமைப்புகள் அமைந்த நெறிமுறைகளுக்கு ஒத்து இருக்கவேண்டும்.

11.1.4 நாடுகள், நேயத்தைப் பேணல் அல்லது தங்களுக்கிடையே முக்கியத்துவம் அளித்தல் அல்லது இரண்டையும் செயலாற்ற ஒத்துழைத்து, நாட்டின் சுகாதார வரையறைகளையும் தேவையான சான்றுமுறைகளையும் ஏற்படுத்தி இவற்றை நடைமுறைப்படுத்தத் தங்களுக்குள் கட்டுப்பாடு மற்றும் சான்றளிக்கும் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஆய்வு செய்ய வேண்டும்.

11.1.5 நாடுகள், நீண்டகாலம் நிலை நிறுத்தக்கூடிய மீன்வள மேம்பாடு மற்றும் மீன்வள ஆதாரங்களின் பயன்பாட்டிற்கான தேசியக் கொள்கைகளை வகுக்கும்போது பிடித்த மீனைப் பதப்படுத்தும் தொழிலின் சமூக பொருளாதாரப் பங்கினை கருத்தில் கொள்ள வேண்டும்.

11.1.6 நாடுகளும், அவற்றைச் சார்ந்த நிறுவனங்களும் மீன்வளத் தொழில் நுட்பம் மற்றும் தரக்கட்டுப்பாடு குறித்தான ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கும்போது, பிடித்த மீனைக் கையாளும் முறைகளைச் செம்மைப்படுத்துவதற்கான திட்டங்களை ஆதரிக்கும்போதும் அவற்றால் ஏற்படும் சமூக பொருளாதாரச் சுற்றுச்சூழல் மற்றும் சத்துள்ள உணவு கிடைப்பதில் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

<<

11.1.7 நாடுகள், தற்போது கையாளப்படும் வெவ்வேறு உற்பத்தி முறைகளைக் கவனத்தில் கொண்டு மிகச்சரியான தொழில்நுட்பத்தை உருவாக்கி அவற்றை மாற்றம் செய்ய ஒத்துழைப்பு நல்குவதன் மூலம், பதப்படுத்துதல், போக்குவரத்து மற்றும் இருப்பு செய்யும் முறைகள் சுற்றுச்சூழலுக்கு மிக ஏதுவாக இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

11.1.8 நாடுகள் மீன் பதனப்படுத்துதல், விநியோகம் மற்றும் விற்பனையில் ஈடுபட்டுள்ளோரைப் பின்வருவனவற்றுக்கு ஊக்குவிக்க வேண்டும் :

அ. மீன்பிடித்த பின்பு ஏற்படும் இழப்புகளையும், கழிவுகளையும் குறைத்தல்.

ஆ. பொறுப்பார்ந்த மீன்வள மேலாண்மை முறைகளுக்கு ஏற்ப தற்செயலாகப் பிடிபடும் மீன்களின் பயன்பாட்டினை மேம்படுத்துதல்.

இ. இயற்கை வளங்களை - குறிப்பாகத் தண்ணீர் மற்றும் சக்தி - சிறப்பாக மரம் ஆகியவற்றைச் சுற்றுச்சூழலுக்கு நன்கு இசைந்த முறையில் பயன்படுத்துதல்.

11.1.9 நாடுகள் மக்களின் உணவில், மீன் உணவு அதிகம் பயன்படுத்துவதை ஊக்குவித்துத் தேவைப்படும் போதெல்லாம் மீன் உட்கொள்வதை வலியுறுத்த வேண்டும்.

11.1.10 நாடுகள் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதற்கு வளரும் நாடுகளுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்.

11.1.11 நாடுகள், பன்னாட்டு மற்றும் உள்நாட்டு மீன் மற்றும் மீன் துணைப்பொருட்களுக்கான வணிகம், சிறந்த மீன் வளப் பாதுகாப்பு, மேலாண்மை முறைகளுடன் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும். இம்முறைகள் மீன் மற்றும் மீன் துணைப் பொருட்களுக்கான வணிகம் எவ்வகையில் துவங்கியது என்ற ஆய்வினை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

11.1.12 நாடுகள் பிடித்த மீன்களைப் பதப்படுத்தும் நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு தகுந்த சட்டம், கட்டுப்பாடு மற்றும் கொள்கைகளை உருவாக்கி இவ்வணிகத்திற்கு எவ்வகைத்தடையும் ஏற்படாமலிருக்க உறுதி செய்து கொள்ள வேண்டும்.

### *11.2 பொறுப்பார்ந்த பன்னாட்டு வணிகம்*

11.2.1 பன்னாட்டு வணிக நிறுவன உடன்படிக்கையிலுள்ளபடி அமைப்புகளுடன் கொள்கைகள், உரிமைகள், கடமைப்பாடு ஆகியவற்றிற்குத் தக்கவாறு இந்த

<<

விதித் தொகுப்பினை பொருளுடையதாக்கிச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

11.2.2 பன்னாட்டு மீன் மற்றும் மீன்சார்ந்த துணைப் பொருட்களின் வணிகம் செழிக்க நீண்ட காலம் நிலைநிறுத்தக்கூடிய மீன் இருப்பு மற்றும் நீர்வாழ் வளங்களை விட்டுக் கொடுக்காவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

11.2.3 நாடுகள், மீன் மற்றும் மீன் துணைப்பொருட்களின் வணிகத்தைப் பாதிக்கும் செயல்பாடுகள் அனைவரும் அறியத்தக்க வகையில் தெளிவாகவும், அறிவியல் முறையில் பொருத்தமான சரியான அழுத்தமுள்ளதாகவும், பன்னாட்டு விதிமுறைகளுக்கு உட்பட்டும் உள்ளது என்பதற்கு உறுதி தரவேண்டும்.

11.2.4 மனிதனின் அல்லது விலங்கின் உயிரையும், உடல் நலத்தையும் பாதுகாக்கவும், நுகர்வோரின் நலனை அல்லது சுற்றுச்சூழலின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு நாடுகள் கடைப்பிடிக்கும் மீன் வணிக முறைகள் ஒருபாற்சார்புடையதாக இருக்கக்கூடாது. அவை பன்னாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வணிக விதிகளுக்கு, குறிப்பாகச் சுகாதார முறைகளைச் செயல்படுத்தும் ஒப்பந்தம் மற்றும் உலக வணிக நிறுவனத்தின் வணிகத்தில் தொழில் நுட்பத் தடைகள் குறித்தான ஒப்பந்தத்தின் கோட்பாடு, உரிமை மற்றும் கடமைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

11.2.5 நாடுகள் மீன் மற்றும் மீன் துணைப்பொருட்கள் வணிகத்தை நடத்துவதற்கான முறைகளைச் சிறந்த முறையில் தளர்த்த வேண்டும். உலக வணிக நிறுவனத்தின் ஒப்பந்தத்திற்கு ஏற்ற வகையில் இவ்வணிகத்திற்கு ஏற்படும் தடைகளை நீக்குவதுடன், இவ்வணிகம் நாடுகளின் கடமைகள், பங்குவீதம் மற்றும் வரி விலக்கு போன்ற நடைமுறைக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

11.2.6 நாடுகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ தேவையற்ற முறையில், வணிகத்திற்கு மறைமுகத் தடைகளை உண்டாக்குவதன் மூலம் வணிகர்கள் துய்ப்போரின் விருப்ப உரிமை, விரைவில் அங்காடி சென்றடைவதற்கு தடையூறு எழா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

11.2.7 நாடுகள், விற்பனையாளர்களுக்கும், அவர்கள் மீன்வளங்களை அணுகுவதற்கும் நிபந்தனைகள் விதிக்கக்கூடாது. மேலும் இந்தக் கொள்கையானது மற்ற மீன்பிடி நாடுகளுக்கிடையேயான மீன்பிடி ஒப்பந்தம், இயற்கை வளங்களை ஏற்றுக்கொள்ளுதல், வணிகம் மற்றும் சந்தை, தொழில்நுட்பப் பரிமாற்றம், பயிற்சி, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் இவை தொடர்பான பிற இலக்குகளுக்கும் விலக்களிப்பதல்ல.

<<

11.2.8 நாடுகள், குறிப்பிட்ட தொழில் நுட்பத்திறனை வாங்குவதற்கும் அல்லது பிற உற்பத்திப் பொருட்களை விற்பதற்கும் சந்தைத் தொடர்பை ஏற்படுத்தக்கூடாது.

11.2.9 நாடுகள், அழியும் நிலையிலுள்ள உயிரினங்களைப் பாதுகாக்கும் வகையில் தொடர்புடைய உடன்படிக்கைக்களுக்கிணங்க வணிகத்தை ஒழுங்கு படுத்துவதில் ஒத்துழைப்பினை நல்க வேண்டும்.

11.2.10 நாடுகள், வாழும் உயிரினப் பொருட்களை வணிகம் செய்வதில் உடன்படிக்கைகளை மேம்படுத்தி ஏற்றுமதி அல்லது இறக்குமதி நடைபெறும் நாடுகளில் சுற்றுச்சூழல் அழியாவண்ணம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

11.2.11 நாடுகள், மீன் மற்றும் மீன் துணைப்பொருள் வணிகம் மற்றும் நீர்வாழ் உயிரின வளப்பாதுகாப்பு ஆகியவற்றுக்கான உரிய பன்னாட்டுத் தர நிர்ணயங்களைத் திறம்படச் செயல்படுத்த ஊக்குவித்து ஒத்துழைப்பும் நல்க வேண்டும்.

11.2.12 நாடுகள், தமது வணிகத்தில் இலாபம் காண அல்லது முதலீட்டில் பலன்பெற நீர்வாழ் உயிரின வள ஆதாரங்களின் வளர்ச்சிக்கேற்ற பாதுகாப்பு முறைகளின் முக்கியத்துவத்தைக் குறைக்கக் கூடாது.

11.2.13 நாடுகள், உலக வணிக (WTO) நிறுவன உடன்படிக்கை ஒப்பந்தத்தில் ஏற்கப்பட்டுள்ள கொள்கைகளுக்கும், உரிமைகளுக்கும், கடமைகளுக்கும் ஏற்றவாறு மீன் மற்றும் மீன்வளத்துணைப்பொருள் வணிகத்திற்கென ஏற்றுக்கொள்ளத்தக்க விதிகள் அல்லது தரங்களை உருவாக்குவதில் ஒத்துழைக்க வேண்டும்.

11.2.14 நாடுகள், ஒவ்வொன்றும் தங்களுக்குள் ஒத்துழைப்பதுடன் தொடர்புடைய மண்டலம் மற்றும் பன்னாட்டு வணிக நிறுவனம் போன்ற பல சார்பு நிறுவனங்களிலும் பன்னாட்டு வணிக நிறுவனம் பங்கேற்றுச் சமத்துவமான, பாகுபாடற்ற மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருட்கள் வணிகம் நடக்கவும், உலக நாடுகளால் ஏற்கப்பட்ட மீன்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

11.2.15 நாடுகள் உதவும் அமைப்புகள், பல்நோக்கு வளர்ச்சி நோக்கமுள்ள வங்கிகள், அவற்றுடன் தொடர்புடைய அனைத்துலக அமைப்புகள், தங்களுடைய கொள்கைகளும் பயிற்சிகளும், வளரக்கூடிய அனைத்துலக வணிகம் மற்றும் ஏற்றுமதிப் பொருட்களது சுற்றுச்சூழலைப் பாதிக்காதவைகளாகவும், மனித சுகாதார மேம்பாடு மற்றும் மனிதனின் அன்றாடத் தேவைகளான அனைத்துப் பொருட்களையும் பாதிக்காதவைகளாகவும், தரமான சத்துணவு மிக்கவையாகவும், துய்ப்போரின் தேவைக்கு ஏற்பவும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

<<

### *11.3 மீன் வணிகம் தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகள்*

11.3.1 மீன் மற்றும் மீன் வளத்துணைப்பொருட்கள் வணிகம் பன்னாட்டு மீன் வணிகச் சட்டத்திற்கு ஏற்றவாறு இருக்கும் வண்ணம் நாடுகளின் விதிகள் மற்றும் நிருவாக நடைமுறைகள் அமைய வேண்டும். மேலும் அவை அனைவரும் அறியும் வகையில் தெளிவாகவும், விரிவாகவும் நடைமுறையிலுள்ள மிகச்சிறந்த அறிவியல் ஆதாரத்தின் அடிப்படையிலும் எவ்வளவு எளிமையாக இருக்க முடியுமோ அவ்வாறு இருத்தல் வேண்டும்.

11.3.2 நாடுகள் தங்களது தேசிய விதிமுறைக்கேற்றவாறு தொழில் துறை நிறுவனங்கள், சுற்றுச்சூழல் தொடர்புடைய அறிஞர்கள் மற்றும் நுகர்வோருடன் கலந்து பேசுவது மற்றும் கலந்தாலோசிப்பதன் மூலம் மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருட்களின் வளர்ச்சிக்கும், சட்ட நடைமுறைக்கும் ஏற்ற வகையில் செயல்பட வேண்டும்.

11.3.3 நாடுகள் தமது சட்ட விதி முறைகள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் அனைத்தையும் எளிய முறையில் அமைத்து, மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருள்களின் வணிகமானது எந்த ஒரு இன்னலுக்கும் ஆளாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

11.3.4 நாடுகள், புதிதாக அறிமுகப்படுத்த விரும்பும் விதி மாற்றங்களையும், மற்ற நாடுகளுடன் மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருள் வணிகமானது பாதிக்கப்படாத வகையில் முன்கூட்டியே தேவையான தகவல்களையும் கால அவகாசத்துடன் பிற உறுப்பு நாடுகளுக்குத் தெரிவிக்க வேண்டும். இதனால் அந்நாடுகளும் உற்பத்தியாளர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு இவற்றைப் பின்பற்றும். இவற்றை நடைமுறைப் படுத்துவதற்கும் ஆலோசிப்பதற்கும் சிறிது காலம் அவர்களுக்கு அவகாசம் கொடுக்கலாம். இதேபோன்று வளரும் நாடுகளுக்கும் இவற்றைப் பின்பற்றத் தற்காலிக விதிவிலக்கு அவகாசம் அளிக்கலாம்.

11.3.5 நாடுகள், மாறுபடும் சூழ்நிலைக்கு ஏற்பப் பன்னாட்டு மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருட்களின் வணிகச் சட்டம் மற்றும் நடைமுறை விதிகள் அவை அறிமுகப்படுத்தப்பட்ட கால கட்டத்திலிருந்து சரியாகப் பொருந்துகின்றனவா என கவனித்து கால இடைவெளிக்கு ஏற்றாற்போல மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

11.3.6 நாடுகள், மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருட்களின் வணிகத்தில் பழக்கத்திலுள்ள தர நிர்ணயத்தை இணக்கமாகவும், முடிந்த வரையில் ஒரே மாதிரியாகவும் பன்னாட்டு அளவில் ஏற்கப்பெற்ற வரையறைக்குட்பட்டு அமைத்துக் கொள்ளவேண்டும்.

<<

11.3.7 நாடுகள், மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருட்களின் வணிகம் தொடர்பான புள்ளி விவரங்களை அவற்றுடன் தொடர்புடைய தேசிய நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து சேகரித்து, சரியான நேரத்தில் பொருத்தமான அளவில் தகுந்த காலத்தில் அவற்றைப் பரப்ப வேண்டும்.

11.3.8 நாடுகள், மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருட்களின் வணிகம் தொடர்பான அனைத்துலக வணிக அமைப்பு மற்றும் அதனைச் சார்ந்த நிறுவனங்களின் சட்டம், ஒழுங்கு நிருவாகத் தன்மை இவற்றில் செய்யப்படும் மாற்றங்கள், மேம்பாட்டு முறைகள் ஆகியவற்றை நன்கு கவனித்துப் பிற ஆர்வமுள்ள நாடுகளுக்கு உடனடியாகத் தெரிவித்து அவ்வணிகம் வளர்ச்சியடைய உதவ வேண்டும்.

## விதிப் பிரிவு 12 : மீன்வள ஆராய்ச்சி

12.1 நாடுகள், மீன்வளத்தை மேலும் விரிவுபடுத்தச் சரியான அறிவியல் தொழில் நுட்ப முறையுடன் மீன்வள மேலாளர்களையும் தொடர்புடைய ஆர்வமுள்ளோரையும் கண்டுபிடித்துப் பொறுப்புடன் முடிவு எடுக்க ஊக்குவிக்க வேண்டும். ஆகவே மீன்வளம் தொடர்பான உயிரியல், சூழலியல், தொழில் நுட்பம், சுற்றுச்சூழல், அறிவியல், பொருளாதாரம் சமூக அறிவியல், நீர்வள உயிரின வளர்ப்பு, சத்துணவு அறிவியல் போன்ற துறைகளில் சரியான முறையில் ஆராய்ச்சி நடைபெறுவதை உறுதி செய்யவேண்டும். வளரும் நாடுகள் ஆராய்ச்சிக்கான பொருட்கள், பயிற்சிமுறைகள், சிறந்த ஆசிரியர்களடங்கிய பயிற்சி நிறுவனங்களுக்கு உரியவர்களைச் சேர்த்தல், ஆராய்ச்சிக்கான கட்டடங்கள் முதலியவற்றில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

12.2. நாடுகள், தகுந்த ஒரு நிறுவனக் கட்டமைப்பை நிறுவ உரிய நேரத்தில் அதனின் செயல்முறை ஆராய்ச்சியின் முடிவுகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

12.3 நாடுகள், தமது ஆராய்ச்சியினை நன்கு பகுத்தாய்வு செய்து ஆராய்ச்சி முடிவுகளைத் தேவைப்பட்டால் தகுந்த முறையில் கமுக்கமாகவோ அல்லது சரியான நேரத்தில் சுலபமாகப் புரிந்துகொள்ளும் வகையிலோ வெளியிட்டுச் சிறந்த அறிவியல் ஆதாரங்கள் மீன்வளப் பாதுகாப்பு மேலாண்மை, மேம்பாடு போன்றவற்றின் வளர்ச்சிக்கு வழிகோல வேண்டும். அறிவியல் தகவல்கள் தேவையான அளவு கிடைக்கப் பெறாத நேரத்தில் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் சரியான ஆராய்ச்சி தொடரப்பட வேண்டும்.

12.4. நாடுகள், நம்பத்தகுந்த, மிகுந்த சரியான, புள்ளி விவரங்களைச் சேகரிப்பதன் மூலம் மீன்வளத் தரத்தையும், சூழலியலுடன் சேர்ந்து பிடிபட்ட மீனின் விவரங்கள், விலக்கப்பட வேண்டியவை, கழிவுகள் ஆகியவற்றையும் நன்கு அறியலாம். இது தொடர்பான நாடுகள் தாம் சேகரித்த புள்ளி விவரங்களைச் சார் மண்டல, மண்டல மற்றும் உலக மீன்வள நிறுவனங்களுக்குத் தேவைப்படும் அளவிற்குச் சரியான நேரத்தில் கொடுத்துதவ வேண்டும்.

12.5 நாடுகள், தங்களின் எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன் இருப்பினால் சூழலியல் மீது தாக்கம், அதிகப்படியான மீன்பிடிப்பு, சுற்றுச்சூழல் சீர்கேடு மற்றும் வசிப்பிட மாற்றம் இவைகள் நடைபெறாத வண்ணம் நன்கு கண்காணிக்க வேண்டும். தட்ப வெப்ப நிலை மாற்றம் அல்லது சுற்றுப்புறச்சூழல் மாற்றத்தினால் மீன் இருப்பு மற்றும் நீர்வாழ் உயிரினச் சூழலியலின் தன்மை கெடாமல் தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

12.6 நாடுகள், தகுதி வாய்ந்த தேசிய ஆராய்ச்சித் திறன்களை ஊக்கப்படுத்திச் சிறப்பான ஆராய்ச்சிப் படிநிலைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

12.7 நாடுகள், தொடர்புடைய பன்னாட்டு அமைப்புகளுடன் ஒத்துழைப்பு நல்குவதுடன் மீன்வளத்தைப் பயன்படுத்தவும், தேவையான ஆராய்ச்சியினை மேற்கொள்ளவும் ஊக்குவித்து, மீன் உணவு தொடர்பான தேசியச் சட்ட ஒழுங்கமைப்பிற்கு உதவியும் புரிதல் வேண்டும்.

12.8 நாடுகள், ஆராய்ச்சியில், கண்காணிப்பில், மனித உணவையளிக்கும் நீர்நிலை ஆதாரங்கள், எந்த இடத்தில் எடுக்கப்படுகிறதோ அதன் சுற்றுச்சூழல் மற்றும் நுகர்வோருக்கு இதனால் எவ்வகைப் பாதிப்பும் இல்லை என்பதற்கு உறுதி தர வேண்டும். இந்த ஆராய்ச்சியின் முடிவுகளைப் பொதுவாக எல்லா இடத்திலும் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

12.9 நாடுகள், பொருளாதார, சமூக, விற்பனை மற்றும் மீன்வள நிறுவனங்களின் நோக்கம் ஆகியவற்றில் தேவையான அளவு ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளதா என்பதனையும், ஆராய்ச்சி முடிவு விவரங்கள் பழக்கத்திலுள்ள கண்காணிப்பு முறைகள், பகுத்தாய்வு செய்தல் மற்றும் கொள்கை நிர்ணயம் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ளன என்பதற்கும் உறுதி அளிக்க வேண்டும்.

12.10 நாடுகள் சரியான மீன்பிடி கருவிகளைத் தேர்வு செய்வதற்கான படிப்பினையும், இம்மீன்பிடி கருவிகளினால் இலக்கிடப்பட்ட மீன்களை மட்டும் பிடிப்பதனால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளையும், இலக்கு நிர்ணயித்த மற்றும் நிர்ணயிக்கப்படாத மீன் வகைகளை இவை எத்தகைய சூழ்நிலைக்குத்

தள்ளுகின்றன என்பதையும் அறிந்து அதற்கேற்ற வகையில் மேலாண்மை முடிவுகளை எடுக்கவும், பயன்படுத்தப்படாத மீன்வகைகளைப் பிடிப்பதைத் தவிர்க்கவும், சூழல் அமைவுகளில் உயிரியல் சிதறலைத் தடுக்கவும், நீர் உயிரின வாழிடங்களைப் பாதுகாக்கவும் சரியான ஆராய்ச்சிப் படிப்பினை மேற்கொள்ள வேண்டும்.

12.11 நாடுகள், வணிக அடிப்படையிலான புதிய மீன்பிடிக் கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், மீன்வளத்திலும், சுற்றுப்புறச் சூழல் அமைவுகளிலும், அவற்றைப் பயன்படுத்தும் இடத்திலும் அவை எந்த அளவில் தாக்கத்தினை உண்டாக்கும் என்பதனைச் சரியான முறையில் மதிப்பீடு செய்ய வேண்டும். இவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் மீன்பிடிக் கருவிகளினால் ஏற்படும் பாதிப்புகளையும் கண்காணிக்க வேண்டும்.

12.12 நாடுகள், பழமை வாய்ந்த மீன்பிடித் தொழில் முறைகள் மற்றும் தொழில் நுட்பங்களை ஆய்ந்து, தொழில் நுட்பம் உடைய-தொழில் நுட்பம் அற்ற சிறிய அளவிலான மீன்பிடி மேற்கொள்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தேவையான அளவு மீன்பிடித்திறனை வளர்க்கவும் மேலாண்மையையும் தொழில் நுட்பத்தையும் மேம்படுத்தவும் தக்க உதவி புரிதல் வேண்டும்.

12.13 நாடுகள், தமது ஆராய்ச்சி முடிவுகள் மேலாண்மை நோக்கங்களை அமைப்பதற்கும், பார்வைக் குறிப்புகள், செய்திறன் தன்மை ஆகியவற்றிற்கும் பயன்தரும் ஆராய்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை ஆகிய இரண்டும் இணைந்து செயல்படுகின்றன என்பதற்கும் உறுதி அளிக்க வேண்டும்.

12.14 நாடுகள், அண்டை நாடுகளின் எல்லைக்குட்பட்ட ஆழ்கடல் பகுதிகளில் தமது அறிவியல் ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் பொழுது மீன்பிடிக் கலன்கள் அப்பகுதிக்குரிய சட்டவிதி ஒழுங்கு முறைகளுக்கும், பன்னாட்டு விதிமுறைகளுக்கும் உட்பட்டு இயங்குகின்றன என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

12.15 நாடுகள், ஆழ்கடலில் நடத்தும் மீன்வள ஆராய்ச்சிக்கு ஒரே மாதிரியான வழிகாட்டி முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

12.16 நாடுகள், சரியான சமயத்தில் ஆராய்ச்சி தொடர்பான தமது ஒரே மாதிரியான வழிகாட்டி நெறிமுறைகளை நிறுவச் செய்து, இதே போல நாடுகளுக்கிடையேயும், சார் மண்டல, மண்டல அளவிலும் நடைபெறும் ஆராய்ச்சிக்கு உதவுவதுடன் ஆராய்ச்சியின் முடிவுகளை மற்ற மண்டலங்களுடன் பகிர்ந்து கொள்ளவும் வேண்டும்.

12.17 நாடுகள், நேரடியாகவோ, பன்னாட்டு நிறுவனங்களின் உதவியுடனோ, இணைந்து தொழில் நுட்ப மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களை வளர்ச்சியடையச் செய்து உயிரியல், சுற்றுச்சூழல் மற்றும் சூழல்அமைவு எல்லையைக் கடந்து இடம்பெயர்ந்து செல்லும் (வலசை செல்லும்) மீன்களின் தொகுதி பற்றியும் நன்கு தெரிந்து கொள்ளும் வகையில் ஆராய்ச்சியினை மேம்படுத்த வேண்டும்.

12.18 நாடுகளும் அவற்றுடன் தொடர்புடைய பன்னாட்டு நிறுவனங்களும் சேர்ந்து, வளரும் நாடுகளின் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்துவதுடன், தங்களுக்கிடையேயும் இவற்றைச் செய்து, ஆராய்ச்சியின் தரத்தை உயர்த்தி, ஆராய்ச்சியுடன் தொடர்புடைய புள்ளி விவரச் சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு, தகவல் தொடர்பு, அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், மனித வள மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிக்கு தேவையான பொருட்களைக் கொடுத்து உதவுதல் போன்றவற்றால், பிற நாடுகள் முழுமையான முறையில் மீன்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகள் மூலம் சரியான முறையில் மீன் இருப்பினை நீண்டகாலம் நிலைநிறுத்தி வரத்தக்கபடி நீர்வாழ் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ள உதவ வேண்டும்.

12.19 தகுதி வாய்ந்த பன்னாட்டு நிறுவனங்கள் சரியான நேரத்தில் மற்ற நாடுகள் கேட்டுக் கொண்டதன் பேரில் தொழில் நுட்பம் மற்றும் நிதியுதவி செய்வதுடன், முற்றிலும் மீன்பிடிக்கப்படாத மற்றும் குறைந்த அளவில் மீன்பிடிக்கப்படும் இடங்களில் மேற்கொள்ளப்படும் இருப்புநிலை மதிப்பீட்டு ஆராய்ச்சிகளுக்கும் உதவ வேண்டும்.

12.20 சரியான தொழில் நுட்பம் மற்றும் நிதி ஆதாரம் உள்ள பன்னாட்டு நிறுவனங்கள் பிற நாடுகள் கேட்கும்பொழுது அவற்றின் ஆராய்ச்சிக்கு உதவுவதுடன், குறிப்பாக வளரும் நாடுகளின் ஆராய்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி அவைகளுக்கும், குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும், சிறிய தீவுகளை உள்ளடக்கிய வளரும் நாடுகளுக்கும் உதவ வேண்டும்.

<<

*இணைப்பு - 1*

# விதித்தொகுப்பின் தோற்றுவாய் மற்றும் விரிவாக்கப் பின்னணி

1. விதித்தொகுப்பின் விரிவாக்கம் மற்றும் ஒப்பந்தம் பற்றிய செயற்பாடுகளை இவ்விணைப்பானது விளக்குகிறது. உணவு மற்றும் மேலாண்மை அமைப்பு மாநாட்டின் இருபத்தெட்டாவது அமர்வில் சமர்ப்பிக்கப்படவும் பின்னர் அம்மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்படவும் வழிவகை செய்தது. இவ்விதித்தொகுப்பின் தோற்றுவாய் மற்றும் மேம்பாட்டிற்குரிய பார்வைக் குறிப்பாக இதனை இணைப்பது பயனளிக்கும் என உணரப்பட்டது. இது இவ்விதித் தொகுப்பு விரிவாக்கத்தில் ஈடுபட்டுள்ள அனைவரின் ஆர்வத்தையும் இணக்கத்தையும் பிரதிபலிக்கிறது. இந்த இணைப்பானது இந்த விதித்தொகுப்பினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான செயற்பாட்டு மேம்பாட்டிற்குத் துணைப்புரியும் என நம்பப்படுகிறது.

2. முக்கிய வகை மீன்களை அளவுக்கு அதிகமாகப் பிடித்தல், சுற்றுப்புற சூழ்நிலை பாதிப்பு, பொருளாதார இழப்புகள், மீன் வணிகத்தை பாதிக்கும் காரணிகள் போன்றவை நீண்டகால நிலையான மீன்வளத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளதையும், இவை நல்கலில் மீன்வளத்தின் பங்கினைப் பாதிப்பதையும் பற்றிப் பல்வேறு பன்னாட்டு மாநாடுகளில் நீண்டகாலமாகவே கருத்துகளை வெளிப்படுத்தியிருக்கின்றன. 'உலக மீன்வளத்தின் தற்போதைய நிலையும் எதிர்கால மேன்மையும்' என்பது பற்றி 1991ம் ஆண்டு மார்ச் திங்களில் மீன்வளம் மீதான உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு குழுவின் பத்தொன்பதாவது அமர்வுக்கூட்டம் கலந்தாய்வு செய்தது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு பொறுப்பார்ந்த மீன்வளத்துக்கான கோட்பாட்டினை மேம்படுத்தவும் நன்னடத்தை விதித்தொகுப்பினை விரிவுபடுத்தவும் இக்கூட்டம் பரிந்துரைத்தது.

3. இதனைத் தொடர்ந்து மெக்சிக்கோ அரசு உணவு மற்றும் வேளாண்மை அமைப்புடன் இணைந்து 1992 மே திங்களில் கான்கன் (Cancun) என்ற இடத்தில் 'பொறுப்பார்ந்த மீன்வளம்' எனும் தலைப்பில் பன்னாட்டு மாநாட்டைக் கூட்டியது. இந்த கான்கன் மாநாட்டின் அறிக்கை பொறுப்பார்ந்த மீன்வளத்துக்கான கோட்பாடுகளை மேலும் மேம்படுத்தி பின்வருமாறு வலியுறுத்தியது.

"இக்கோட்பாடு பின்வரும் கூறுகளை உள்ளடக்கியதாகும். சுற்றுச்சூழலுக்கு ஏற்ப மீன்வளத்தை நீடித்து நிலைநிறுத்துமாறு பயன்படுத்துதல்; சுற்றுச்சூழல், வள

<<

ஆதாரங்கள் மற்றும் அவற்றின் தரத்திற்கு தீங்கு ஏற்படாத வகையில் மீன்பிடிப்பு மற்றும் மீன்வளர்ப்பைப் பயன்படுத்துல், மீன்சார்ந்த பொருள்களுக்கு மேலும் மதிப்பு சேர்க்கும் முறைகளைச் சுகாதாரத் தரங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளுதல், நுகர்வோருக்கு நல்ல தரமான பொருள்கள் கிடைக்கும் வகையில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்".

4. கான்கன் தீர்மானமானது 1992ல் ரியோ நகரில் நடைபெற்ற UNCED மாநாட்டின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அம்மாநாடும் பொறுப்பார்ந்த மீன்வளத்துக்கான விதித்தொகுப்பு தயாரிக்கப்படுவதை ஆதரித்தது. பொறுப்பார்ந்த மீன்பிடி முறைகளை நடைமுறைப்படுத்தவும், இவ்விதித் தொகுப்பின் நடத்தைகள் பெரிதும் உதவி புரிந்தன. மேலும், 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஆழ்கடல் மீன்பிடிப்பு பற்றி நடைபெற்ற உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் தொழில் நுட்பக் கலந்தாய்வில் ஆழ்கடல் மீன்பிடிப்பில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் இவ்விதித்தொகுப்பு விரிவுபடுத்தப்பட வேண்டுமெனப் பரிந்துரை செய்யப்பட்டது.

5. 1992 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற்ற உணவு மற்றும் வேளாண்மை அமைப்புக் குழுவின் நூற்று இரண்டாவது அமர்வுக் கூட்டத்தில் இவ்விதித் தொகுப்பை விரிவுபடுத்த கலந்தாய்வு செய்யப்பட்டது. அதில் ஆழ்கடல் மீன்பிடிப்பிலுள்ள பிரச்சினைகளுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்றும், 1993ல் மீன்வளம் பற்றி நடைபெறவிருக்கும் மீன்வளக் குழுவின் அமர்வுக் கூட்டத்திற்கு இவ்விதித் தொகுப்பிற்கான கருத்துருவைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது.

6. இவ்விதித் தொகுப்பிற்கான வழிகாட்டுதல்களை விரிவுபடுத்துதல் மற்றும் இவ்விதித்தொகுப்பினை மேலும் விரிவுபடுத்துவதற்கு ஒரு காலக்கெடு விதித்தல் உட்பட இவ்வித்தொகுப்புத் தொடர்பான கோட்பாடுகளை 1993ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற்ற மீன்வளக்குழுவின் இருபதாவது அமர்வு ஆராய்ந்தது. மேலும் மாற்றுக் கொடிகளை மீன்பிடிக் கலன்களில் பயன்படுத்திக் கொண்டு ஆழ்கடல் பகுதியில், மீன்வளப் பாதுகாப்பிற்கும், மேலாண்மைக்கும் இடையூறாக மீன்பிடித்தலை தடுக்கும் வகையில் உணவு மற்றும் மேலாண்மை அமைப்பானது விரைவாக இவ்விதித் தொகுப்பின் ஒரு பகுதியாகக் கருத்துருவைத் தயாரிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டது.

7. தொடர்புடைய ஐக்கிய நாடுகளின் முதன்மைகள் பிற பன்னாட்டு அமைப்புகள் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றின் கலந்தாலோசனை மற்றும்

<<

ஒத்துழைப்புடன் பொறுப்பார்ந்த மீன்வளம் தொடர்பான நன்னடத்தை விதித்தொகுப்பு மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன.

8. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் ஆட்சிக் குழுவின் அறிவுரைப்படி 1982ம் ஆண்டு கடல் சட்டவிதிகளின் மீது நடைபெற்ற ஐ.நா கூட்ட முடிவுகளுக்கேற்றவாறும், 1992ல் நடைபெற்ற கான்கன் மற்றும் 1992ல் ரியோ நாடுகளின் தீர்மானம் மற்றும் UNCEDயின் 21வது பொருள் நிரலில் வகைச்செய்யப்பட்டுள்ளதற்கேற்றவாறும், ஆழ்கடல் மீன்பிடிப்பு தொடர்பாக 1992ல் வெளியிடப்பட்ட உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளின்படியும், 1984ல் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு நடத்திய மீன்வள மேலாண்மை மற்றும் வளர்ச்சி பற்றிய உலக மாநாடு ஆதரித்த செயல்முறைகளின் படியும், 1995 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் இடம்பெயரா மற்றும் (வலசை செல்லும்) அதிகமாக இடம் பெயரும் மீன் இருப்புகளின் தன்மைகளைப் பற்றி நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மாநாட்டின் முடிவுகளின் படியும் 1982ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10ஆம் நாளன்று கடல்சட்டத்தின் மீதான ஐ.நா. கூட்டத்தின் மீனிருப்புகள் மற்றும் அதிக அளவில் வலசை போகும் மீன் இடம்பெயரா இருப்புகள் பற்றி, வழிவகைகளை நடைமுறைப் படுத்துவதற்கான ஓர் உடன்படிக்கையைப் பின்பற்றும் வகையிலும் விதித்தொகுப்பு வரைவு இயற்றப்பட்டது.

9. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மாநாடு 1993 - நவம்பரில் நடத்திய இருபத்தேழாவது அமர்வில் ஆழ்கடல் பகுதிகளில் மீன்பிடிக் கலன்களின் பன்னாட்டுப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை அளவீடுகளை ஏற்றுக்கொண்டது. மேலும் பொருள் சார்ந்த விதிகளை அமைப்பதற்கேற்ப பொறுப்பார்ந்த மீன்வளத்திற்குரிய நடத்தை விதித்தொகுப்பின் பொதுக்கோட்பாடுகளை வேகமான முறையில் தயாரிப்பதற்குப் பரிந்துரை செய்தது. அதன்படி 1994 - பிப்ரவரியில் ரோம் நகரில் கூடிய அரசால் தனிமுறையிலான தொழில் வல்லுநர் குழுவால் பொது விதிக்கோட்பாடுகளின் வரைவு மறு ஆய்வு செய்யப்பட்டது. திருத்தப்பட்ட வரைவானது உணவு மற்றும் வேளாண்மை அமைப்பிலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும், கூட்டு உறுப்பினர்களுக்கும் மற்றும் பன்னாட்டு அரசு, அரசு சாரா நிறுவனங்களுக்கும் பரவலாகச் சுற்றுக்கு அனுப்பப்பட்டது. பொதுவான கோட்பாடுகளின் இரண்டாம் வரைவின் மீது பெறப்பட்ட கருத்துகள் வரைவு விதித்தொகுப்பில் ஒருங்கிணைக்கப்பட்டன. மாற்று விதித்தொகுப்பிற்கான கருத்துருவும் அனுப்பப்பட்டது. இம் மறுவரைவு ஐக்கிய நாடுகளின் சார்பில் 1994ல் ஆகஸ்ட் திங்களில் நியூயார்க் நகரில் நடைபெற்ற, நிலையற்ற மற்றும் அதிக

<<

அளவில் வலசை போகும் மீன் இருப்புகளின் மீதான நான்காவது அமர்வின்போது அரசு சாரா நிறுவனங்களுடனும் பொதுவாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.

10. இவ்விதித்தொகுப்பின் முழுவரைவுகளையும் விரிவாகப் பரிசீலனை செய்ய ஏதுவாக பொறுப்பார்ந்த மீன்வள விதித்தொகுப்பின் மீது ஒரு தொழில்நுட்பக் கலந்தாய்வுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென முதன்மை இயக்குனர் 1994 ஜுன் திங்களில் நடைபெற்ற குழுவின் நூற்றுஆறாவது அமர்வில் பரிந்துரைத்தார். இவ்விதித்தொகுப்பை விரிவுபடுத்துவதற்குள்ள இத்தொடக்க நிலையில் தொடர்புடைய அனைவரும் இதில் பரந்த ஈடுபாடுகொள்ள வாய்ப்பு நல்கும் வகையில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் அனைத்து ஆர்வமுள்ள உறுப்பினர்கள், உறுப்பினரல்லாதோர், பன்னாட்டு அரசு மற்றும் அரசு சாரா அமைப்பினர் போன்ற அனைவரும் இக்கலந்தாய்வில் பங்கு கொள்ளவும் பரிந்துரைக்கப்பட்டது.

11. இந்தத் தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவின் கூட்டம் ரோம் நகரில் 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 5-ஆம் நாள் வரை நடைபெற்றது. இதில் இம்குழு விதித்தொகுப்பிற்கான ஒரு வரைவும், விதித்தொகுப்பின் பெரும்பாலான பொருள் சார்ந்த விதிப்பிரிவுகளுக்கு உறுதுணை புரியும் வகையிலான தொழில் நுட்ப வழிகாட்டுதல்களின் முதல் வரைவும் வைக்கப்பட்டன. தொடர்ச்சியாக இவ்விதித் தொகுப்பின் அனைத்துப் பகுதிகளுக்கான வரைவுகளும் திரும்பவும் பரிசீலிக்கப்பட்டு, பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் விமர்சனங்களின் அடிப்படையில் அவற்றிற்கு ஏற்ப மாற்றுச் செயலாக்க வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டது.

12. இந்த ஆலோசனையில் அடங்கியுள்ள ஆறு முக்கிய குறிக்கோள் விதித்தொகுப்பு நடத்தை முறைகளில் மூன்று விதிகளை மேலும் விரிவுபடுத்தி, மேம்படுத்த, குறிப்பாக விதி 9ல் “ஒருங்கிணைந்த மீன்வள கடலோர மேலாண்மை”, விதி 6ல் “மீன்வள மேலாண்மை”, விதி 7ல் “மீன்பிடி முறைகள்” போன்றவைகளை, இடம்பெயரா மற்றும் அதிக அளவில் இடம் பெயரும் மீன் தொகுப்புப் பற்றியதற்கான ஐக்கிய நாடுகளின் கருத்துகளால், ஏகமான தாக்கத்தை உண்டாக்கும் தத்துவங்களை தவிர்த்து, மறு வரைவுரை தயாரிக்கப் பட்டது. இதற்காக ஒரு சிறிய நிர்வாக அறிக்கையினை தயார் செய்து உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்வளக்குழுவிற்கு வழங்கப்பட்டது.

13. 1994ம் ஆண்டு நவம்பர் திங்களில் 15 முதல் 24 வரை நடைபெற்ற 107வது கூட்டத்தில் "தொழில் நுட்ப ஆலோசனை மன்றத்திற்கு" ஐக்கிய நாடுகளால்

மேற்படி மாநாட்டின் முடிவான அறிக்கை வரும் வரை ஆழ்கடல் தொடர்பான கொள்கைகளை நிறுத்தி வைப்பது பற்றிக் குழுவிற்கு ஆலோசனை வழங்கியது. இக்குழு பரிந்துரைத்த ஆலோசனைகள் அடுத்து நடந்த மீன்வளக்குழு கூட்டத்தொடரில் நன்கு விவாதிக்கப்பட்டு இறுதி நடத்தை விதித் தொகுப்புவரைவு உருவாகும். உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மன்றத்தில் 1995ம் ஆண்டு ஜுன் திங்களில் சமர்பிக்கப்பட்டு, இவ்விதித் தொகுப்பினை மேலும் சரியான முறையில் விரிவுபடுத்தத் தேவையேற்படின் "தொழில் நுட்பக் குழுவின்" கருத்துடன் "மன்றத்தின் அமர்வில்" ஆலோசித்து விதித் தொகுப்பின் விதிமுறைகள் விரிவாக்கப்படும் என முடிவு எடுத்தது.

14. "தொழில் நுட்பக் குழுவின்" தெளிவுப்பட்ட விமர்சனங்களின்படியும், விரிவான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையிலும், தலைமையகம் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பினைச் சற்று திருத்தி, மறு வரைவு தயார் செய்து 1995ம் ஆண்டு மார்ச் திங்கள் 10 முதல் 15 நாட்கள் நடைபெற்ற மீன்வளக் குழுவின் இருபத்தொன்றாவது அமர்வில் சமர்ப்பித்தது.

15. ஐக்கிய நாடுகளின் மாநாடானது நடத்தை விதித் தொகுப்பு மற்றும் அது தொடர்பான வேலைகள் அனைத்தையும் 1995ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களுக்குள் முடித்துவிட வேண்டும் என்ற முடிவினை "மீன்வளக் குழுவிற்குத்" தெரிவித்தது. மேலும் நடைமுறை விதித்தொகுப்பின் வரையறையில் விடுபட்டுள்ள கோட்பாடுகளை, ஐக்கிய நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழியில், மீன்வளக் குழு மற்றும் ஆலோசனைக் குழுவின் முடிவுக்குட்பட்டு மீண்டும் இடம் பெறச் செய்தல் வேண்டும். எனவும் 1995ம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடைபெறும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் இருபத்தெட்டாவது அமர்வுக்கு முன் முழுமை பெற்ற நடத்தை விதித் தொகுப்பினைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டது.

16. இவ்விதித்தொகுப்பினை வரையறை செய்வதற்காக தலைமைச் செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் நிலைகளும் மீன்வளக் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டன. இத்தொகுப்பின் வரைவுகளை ஆய்வு செய்யத் திறந்த முறையில் செயல்படும் ஒரு செயல் பிரிவுக்குழு ஏற்படுத்தப்பட்டது. இச்செயல் பிரிவுக்குழு 1995ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 முதல் 14ஆம் தேதி வரை தொழில் நுட்ப ஆலோசனையைத் தொடர்ந்து பரிந்துரைக்கப்பட்ட விதித்தொகுப்பின் வரைவின் அனைத்து அம்சங்களையும் மறு ஆய்வு செய்தது. இவ்வாய்வு முடிக்கப்பட்டு 6 முதல் 8 வரையிலான பிரிவுக் கூறுகள் ஏற்கப்பட்டன. காலக்கெடு குறைவாக இருந்ததினால், தலைமைச் செயலகத்தைப் பிரிவுக்கூறு

<<

1 முதல் 5 வரை மறுவரைவு செய்யுமாறு செயல்பிரிவு குழு கேட்டுக் கொண்டது. மேலும் ஆராய்ச்சி, கூட்டுறவு, நீர்வாழ் உயிரின வளர்ப்பு பற்றியனவும் பிரிவுக்கூறு 5ல் இடம் பெற வேண்டும் எனவும், இவ்விதித் தொகுப்பானது வளர்ச்சியடையச் சரியானப் பொது தத்துவங்களைப் பிரதிபலிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டது.

17. நூற்று ஏழாவது அமர்வின் முடிவில் இவ்விதித் தொகுப்புத் தயாரிப்பினை நிறைவு செய்வது தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவிற்கு மீன்வள ஆலோசனைக்குழு தனது ஆதரவினைத் தெரிவித்தது. ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் வெளியிடப்பட்டக் கருத்தின் அடிப்படையில், விதித்தொகுப்பில் சிறிய பாகமாக இடம் பெற்றுள்ள இடம்பெயரா மற்றும் வேகமாக இடம் பெயரும் (வலசை போகும்) மீன்களின் பிரச்சினைகள் குறித்தான கோட்பாடுகளின் கடைசி வார்த்தைகள் மறுஆய்வு செய்யப்பட வேண்டும். இக்குழு, இவ்விதித்தொகுப்பு குறித்து உடன்பாடு ஏற்பட்டவுடன் அதற்கு ஒப்புதல் பெறும் முகமாக இத்தொகுப்பிலுள்ள சட்ட, தொழில் நுட்ப மற்றும் மொழி வழக்குகளை ஒருமித்த கருத்துடையதாக்க வேண்டும்.

18. திறந்த அமைப்பு கொண்ட செயல்குழு தயாரித்த அறிக்கை 1995 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14 மற்றும் 15 தேதிகளில் COFI கூட்டத் தொடருடன் இணைந்து நடைபெற்ற மீன்வளம் குறித்தான அமைச்சர்களின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ரோமில் நடைபெற்ற, உலக மீன்வளக் கருத்து ஒருமைப்பாடு கூட்டம் அரசுத் துறைகளும், பன்னாட்டு அமைப்புகளும் தக்க நடவடிக்கையெடுத்து பன்னாடுகளுக்கான பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பை 1995ம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடைபெறவிருக்கும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மாநாட்டில் முற்றிலும் முடிக்கப்பெற்ற நிலையில் சமர்ப்பிக்க ஏதுவாக நடவடிக்கையெடுக்க வேண்டும் என விரைவுபடுத்தியது.

19. நூற்று எட்டாவது அமர்வில் மறுவரைவு செய்யப்பட்ட நடத்தை விதித்தொகுப்பு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த குழுவானது வெளிப்படையான முறையில் செயல்படும் தொழில் நுட்பக் குழுவினை நியமித்தது. 1995ம் ஆண்டு ஜுன் திங்கள் 5 முதல் 9ம் தேதி வரையில் நடைபெற்ற முதல் அமர்வில் பரவலாக மண்டலப் பிரதிநிதித்துவம் கொண்ட உறுப்பினர்களும், பார்வையாளர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். அரசுத்துறை நிறுவனங்களும் அரசு சாராத அமைப்புகளும் இக்கூட்டத் தொடரில் பெருமளவில் கலந்து கொண்டன.

20. முன்னுரையையும் சேர்த்துப் பிரிவுக்கூறு 1 முதல் 15 வரை செம்மையாக ஆய்வு செய்துவிட்டதாக குழுவிடம் தொழில்நுட்பக் குழு தெரிவித்தது. 8 முதல் 11

<<

வரையான பிரிவுக்கூறுகளையும் அது ஆய்ந்து, மாற்றி ஏற்றுக்கொண்டது. ஆறாவது பிரிவுக்கூறினைச் சீராய்வு செய்யத் தொடங்கிவிட்டதாகக் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது.

21. "தொழில் நுட்பக்குழுவால்" ஏற்று செய்து முடிக்கப்பெற்ற வேலையினை மேற்படி "மன்றம்" ஏற்றுக் கொண்டதுடன் 1995ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25 முதல் 29 வரை நடைபெற இருந்த இரண்டாவது அமர்விற்குப் பரிந்துரை செய்து "ஐக்கிய நாடுகளின் நிலையான மற்றும் வலசை போகும் (வேகமாக இடம் பெயரும்) மீன் இருப்புத் தொகுதி பற்றிய மாநாட்டின்" முடிவுகளைக் கருத்திற் கொண்டு, இந்த நடவடிக்கை விதித்தொகுப்பினை நன்கு கற்றுணர்ந்த பன்மொழிப் புலவர்கள் மற்றும் சட்ட இயல் வல்லுநர்களைக் கொண்டு சரியான முறையில் சீராய்வு செய்து முடித்துக் கொடுக்கும்படியும் கேட்டுக் கொண்டது.

22. நடத்தை விதித் தொகுப்பின் திருத்திய வரைவு, திறந்த-வெளிப்படையான அமைப்பான "தொழில் நுட்பக் குழுவின்" அனுமதி பெற்று "மீன்வள மன்றத்தின் நூற்று எட்டாவது அமர்வின்" ஏற்பினையும் பெற்றது. மேலும் இவ்வரைவு "தொழில் நுட்பக் குழுவின்" "இரண்டாவது அமர்விற்கு" ஒரு நல்ல மாநாட்டு ஆவணமாகவும், ஆய்வுக் கட்டுரையாகவும் அமைந்தது. உடன்படிக்கை நிலுவை விவரங்கள் தெளிவாக அறியப்பட்டன.

23. இவ்விதித் தொகுப்பினை முழுமையான அளவில் இறுதிசெய்ய ஏதுவாகச் செயலகமானது "விதி 6க்கான செயலகக் கருத்துரு, மீன்வள மேலாண்மை மற்றும் விதி 7" மீன்பிடி முறைகள் போன்ற பிரிவுகள் அடங்கிய பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பை, ஐக்கிய நாடுகளின் 1995ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் ஏற்றுக்கொண்டபடி இடம் பெயரா மற்றும் (வலசை போகும்) வேகமாக இடம்பெயரும் மீன் இருப்பு இனங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்காக ஏற்பட்ட ஒப்பந்தத்தைக் கருத்தில் கொண்டும் ஆவணமானது தயார் செய்யப்பட்டது. மேலும் செயலகமானது சட்ட வல்லுநர்கள் மற்றும் பன்மொழிப் புலவர்களைக் கொண்டு ஏற்படுத்திய கருத்துருவானது சரியாக முடிக்கப்பெற்று நூல் வடிவில் மூன்று மொழிகளில் (ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பெயின்) வெளியிட்டு மீன்வளக் குழுவிற்குக் கிடைக்கும்படி செய்தது.

24. மன்றத்தின் திறந்த - வெளிப்படையான அமைப்பு கொண்ட "தொழில் நுட்பக் குழுவின்" "இரண்டாவது அமர்வு" 1995 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25 முதல் 29 முடியப் பல மண்டலங்கள் மற்றும் ஆர்வமுள்ளோரின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்டது. இக்குழு முழு ஒத்துழைப்புடன் தான் ஏற்றுக்கொண்ட

<<

பணிப்பொறுப்பின்படி நடத்தை விதித்தொகுப்பின் ஒவ்வொரு விதிப்பிரிவையும் முழுமையாக முடித்து ஏற்பளித்தது. இக்குழு நடத்தை விதித் தொகுப்பிலுள்ள உடன்பாடான நிலைகளை முடிவு செய்தது. திறந்த அமைப்பு கொண்ட முறைசாரா மொழி இயல்புக்குழு மேலும் ஓர் அமர்வினை உண்டாக்கிச் செயலகத்துடன் இணைந்து தொகுப்பின் மொழி இயல்பினை, நடந்து முடிந்த கூட்டத்தொடருக்குத் தக்கவாறு முடித்தது. இக்குழுவானது செயலகத்திற்கு, முடிந்த இவ்வரைவைத் திருத்திய மாநாட்டு ஆவணமாக மன்றத்தின் நூற்று எண்பதாவது அமர்விற்கும், மாநாட்டின் இருபத்தி எட்டாவது அமர்விற்கும் இதனை ஏற்பிற்கு அனுப்புமாறும் அறிவுறுத்திய மன்றத்தின் தொழில் நுட்பக்குழு முடிவான வரைவினை ஏற்பளித்தது. மாநாட்டின் வரைவுத் தீர்மானத்தையும், விரைவு கருதி அனைத்து நாடுகளும் இவ்வரைவினைப் பின்னேற்பு செய்யவும் சென்ற மாநாட்டின் கடைசி அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இசைவு ஒப்பந்தத்தை ஏற்கவும் செயலகம் பணிக்கப்பட்டது. மாநாட்டின் இருபத்தி எட்டாவது அமர்வு 1995 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31ஆம் நாளன்று கூடி கருத்துஒத்து, பொறுப்பார்ந்த மீன்வள நடத்தைவிதித் தொகுப்பிற்கு இணைப்பு இரண்டில் கண்ட தீர்மானத்தின் மூலம் ஏற்பளித்தது.

<<

*இணைப்பு : 2*

## தீர்மானம்

*இம்மாநாடு*

உலக உணவுப் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றில் மீன்வளத்தின் இன்றியமையாப் பங்கினை ஏற்றுக்கொள்கிறது. இதேபோன்று நீர்வாழ் உயிரின ஆதாரங்களை நீண்ட காலத்திற்கு நிலைநிறுத்துதல் மற்றும் இவற்றின் சுற்றுச்சூழல் ஆகியவற்றை நிகழ்கால மற்றும் வருங்காலத் தலைமுறையினருக்கு உறுதி செய்தலின் இன்றியமையாமை ஆகியவற்றையும் மாநாடு ஏற்றுக்கொள்கிறது.

1991, மார்ச் 19ஆம் நாளன்று நடந்த மீன்வளக் குழுவினை நினைவுகூர்ந்து, பொறுப்பார்ந்த மீன்பிடிப்பிற்கான கோட்பாட்டினை மேம்படுத்தவும், இது தொடர்பில் சட்டமுறை ஆவணம் ஒன்றினை முறையாக வகுத்திடவும் பரிந்துரைத்தது.

மெக்சிகோ அரசு, உணவு மற்றும் வேளாண்மை அமைப்புடன் இணைந்து மே 1992-ல் நடத்திய பொறுப்பார்ந்த மீன்வளம் மீதான பன்னாட்டு மாநாட்டில் வெளியிடப்பட்ட "கான்கன்" தீர்மானத்தைக் கருத்திற்கொண்டு, பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பைத் தயாரிக்குமாறு கோரியது.

1982 ஆம் ஆண்டுக் கடல் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகளின் இணக்கவிதி நடைமுறைக்கு வருதல், இடம்பெயரா மற்றும் வேகமாக இடம் பெயரும் மீன்தொகுதிகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குறித்து 1982 டிசம்பர் 10ஆம் நாளிட்ட கடல் சட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையின் ஐக்கிய நாடுகளின் இணக்க விதியில் உள்ள வழிவகைகளைச் செயற்படுத்துவதற்காக உடன்படிக்கை நிறைவேற்றம் ஆகியவற்றை கருத்திற்கொண்டும், 1992 ரியோ அறிவிப்பில் எதிர்பார்த்தவாறும் UNCEDயின் பொருள்நிரல் 21இல் உள்ள சார்வழிவகைகளைக் கருதியும் சார் மண்டல மற்றும் மண்டல ஒத்துழைப்புக்கான தேவை அதிகரித்துள்ளது என்பதனைக் கருதி உலக உணவு மற்றும் வேளாண்மை அமைப்பிற்கு அதன் செயல் கடமைக்கு ஏற்பச் சிறப்பான பொறுப்புகள் அளிக்கப்படுகின்றன.

ஆழ்கடலில் மீன்பிடிக்கும் கலன்களால் பன்னாட்டு மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளுடனான இணக்கத்தை மேம்படுத்துதற்கு 1993ஆம் ஆண்டு மாநாடு உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு உடன்படிக்கையினை நிறைவேற்றியதையும், அவ்வுடன்படிக்கை இவ்விதித் தொகுப்பின் ஓர் அங்கமாக அமையும் என்பதையும் மேலும் நினைவு கூர்ந்தது.

<<

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு அதன் ஆட்சிக்குழுவின் முடிவுக்கேற்ப, நடத்தை விதித்தொகுப்பினை முறைப்படுத்திட தொழில் நுட்பக் கூட்டத்தொடர்களை நடத்தியும் இக்கூட்டங்கள் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு வரைவு குறித்து உடன்பாடு ஏற்பட ஏதுவாக அமைந்ததையும் மனநிறைவுடன் குறிப்பிடுகிறது.

1995, மார்ச் திங்கள் 14-15 தேதிகளில் நடந்த மீன்வள நிர்வாகக் கூட்டத்தில் வெளியான உலக மீன்வளம் பற்றிய 'ரோம் பொது கருத்து" ஏற்றுக்கொண்டு நடப்பு மீன்வள நிலமை மற்றும் பொறுப்பான மீன்வள நடத்தை விதித்தொகுப்பை நிறைவேற்றுவதன் மூலம் பயன் விளைவிக்கத்தக்க வகையில் செயல்படுமாறும் இவற்றிக்கு இடையே உள்ள நிலைகளைக் கருதுமாறும் அரசுகள் மற்றும் பன்னாட்டு அமைப்புகளைக் கோருகிறது. ஆழ்கடல் மீன்பிடிக் கலன்களால் பன்னாட்டு மீன்வளப் பாதுகாப்பு, மேலாண்மை நடவடிக்கைகளுடன் இணக்கத்தை மேம்படுத்துவதற்கு உடன்படிக்கை நிறைவேற்றுவது குறித்துக் கருதுமாறும் ஆழ்கடலில் மீன்பிடிக் கப்பல்கள் செயல்படும்.

1. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பினை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கிறது.

2. இந்த விதித் தொகுப்பிலுள்ளக் குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகளை நிறைவேற்றுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் நாடுகளும், அரசு சார்ந்த அல்லது சாராத பன்னாட்டு அமைப்புகளும் மீன்வளத்தில் ஈடுபாடு கொண்டுள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென அழைப்பு விடுக்கிறது.

3. இவ்விதித்தொகுப்பிலுள்ள வழிவகைகளைச் செயலாக்கும் நிலையில் வளரும் நாடுகளின் சிறப்புத் தேவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டுமெனக் கோருகிறது.

4. இவ்விதித் தொகுப்பினை நடைமுறைப்படுத்துவதில் வளரும் நாடுகளுக்கும் வழிகாட்டுதலை நல்குவதற்காகச் செயல் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டத்தில் உரிய வழிவகைகளை ஏற்படுத்துமாறு உணவு மற்றும் வேளாண்மை அமைப்பை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. இவ்விதித் தொகுப்பினைச் செயற்படுத்துவதில் ஆதரவாக பிற வெளியமைப்புகளின் உதவிகளைப் பெறுவதற்காகப் பன்னாட்டு மண்டல உதவித்திட்டத்திற்கான வழிவகைகளையும் அதில் ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறது.

5. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, உறுப்பினர் நாடுகளுடனும் மற்றும் ஆர்வமுள்ள பிற நிறுவனங்களுடனும் இணைந்து இந்த விதித்தொகுப்பினை

<<

விரிவுபடுத்தவும் இத்தொகுப்பை நடைமுறைப்படுத்த ஆதரவாக தகுந்த தொழில்நுட்ப அறிவுரைகளை, வழங்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. இந்த விதித் தொகுப்பின் செயலாக்கத்தைக் கண்காணிக்குமாறும், அதுபற்றியும், அதனால் மீன்வளத்தில் ஏற்பட்டுள்ள விளைவுகள் பற்றியும் அறிக்கை தருமாறும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பைக் கேட்டுக் கொள்கிறது. மேலும் மற்ற சட்டங்களின் அடிப்படையிலும், ஐ.நா. அமைப்புகளின் தீர்மானங்கள் அடிப்படையிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றியும் அவ்வறிக்கை அமைதல் வேண்டும். குறிப்பாக இடம்பெயரா மற்றும் இடம்பெயரும் மீன் தொகுதி இருப்புகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குறித்த 1982 டிசம்பர் 10ஆம் நாளிட்ட கடற்சட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகள் தீர்மானத்தில் உள்ள வழிவகைகள் செயலாக்கப்படுவதற்கான உடன்படிக்கைக்கு வழிவகுத்தலையும், இடம் பெயரா மற்றும் வேகமாக இடம் பெயரும் மீன் தொகுதி இருப்புகள் மீதான மாநாட்டிற்குப் பயனூட்டும் வகையில் பொதுக் குழுவால் நிறைவேற்றப்பட்டவையுமாகிய தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையைக் குறிப்பதாக அவ்வறிக்கை அமைதல் வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. மீன் வளத்தில் சார் மண்டல, மண்டல, உலக அளவிலான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புடன் மீன் வளப்பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளை மேலும் பயனுள்ள வகையில் கையாள ஏதுவாக மண்டல மீன்வள அமைப்புகளை வலுப்படுத்துமாறு உணவு மற்றும் வேளாண்மை அமைப்பினை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

This publication includes the text of the Code of Conduct for Responsible Fisheries, background to the origin and Elaboration of the Code, and Resolution 4/95 as adopted by the Twenty-eighth Session of the FAO Conference on 31 October 1995.